சுஜாதா



ஹைக்கூ

ஒரு புதிய அறிமுகம்

ஹைக்கூ
ஒரு புதிய அறிமுகம்

சுஜாதா

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

முன்னுரை

ஹைக்கூ என்னும் கவிதை வடிவம் ஜப்பானிலிருந்து நமக்கு வந்து, தமிழுக்கு ஏற்ப மேலும் மாறி, மிகமிக பிரபலமாகி, சுலபமாக்கப்பட்டு, நிஜ ஹைக்கூக்கள் அடையாளமிழந்து சமூகச்சாயம் ஏற்றிய, மூன்று வரிகளில் எழுதப்பட்ட எல்லா கவிதைகளும் ஹைக்கூ என்கிற கேவலநிலைக்கு வந்துவிட்டதால் உண்மையான ஹைக்கூக்களை அடையாளம் கண்டுகொள்ள இம்மாதிரியான புத்தகங்கள் தேவை என்று தோன்றி இது எழுதப்பட்டது. இதைப் படித்தபின் பல ஹைக்கூக்கள் எழுதப் படாமல் இருந்தால் இப்புத்தகத்தின் குறிக்கோள் நிறைவேறுகிறது.

சுஜாதா

1. ஹைக்கூ ஒரு புதிய அறிமுகம்

நள்ளிரவில்
தூரத்தில் ஒரு கதவு
இழுத்து சார்த்தப்பட்டது.

மேலே குறித்த மூன்று வரிகளைப் படித்ததும் உங்கள் மனதில் எழுந்த நினைவுகள் என்ன? உடனே பார்க்கும்போது இந்த மூன்று வரிகள் ஒரு நிகழ்ச்சியை விவரிக்கும் வெறும் வரிகள்தாம். ஆனால் சற்றே சிந்திக்கையில் இதன் பரிமாணங்கள் விரிவதை கவனிக்க முடியும். நள்ளிரவு இந்த வரிகளை எழுதியவன் விழித்திருக்க வேண்டும். அவன் தனிமை வெளிப்படுகிறது. அவனுக்கு ஏன் தூக்கம் வரவில்லை? கவலையா? தனிமையா? உடல்நலமில்லையா? ஏன் விழித்திருக்கிறான். எங்கே இவன் விழித்திருக்கிறான். நகரத்திலா ... கிராமத்திலா? நகரத்தில் இருக்க முடியாது அத்தனை நிசப்தம். நகரத்தில் ஏது, அத்தனை நிசப்தம்? தூரத்தில் கதவு சார்த்துவதைக் கேட்க முடியும் சப்தம். அந்த சப்தத்தின் அர்த்தம் என்ன ...? அந்த வேளைக்கு வீட்டுக்கு வந்தது யார்? ஒரு தகப்பனா, ஒரு மனைவியா, ஒரு மகனா, வயசுக்கு வந்த பெண்ணா ...? அல்லது யாராவது கோபத்தில் வீட்டைவிட்டு வெளியே செல்கிறார்களா?

மூன்றே மூன்று வரிகள். அவை ஏற்படுத்தும் சலனங்கள் எத்தனை பாருங்கள். ஒஸாகி ஹோஸாய் என்கிற நவீன ஜப்பானிய கவிஞரின் ஹைக்கூ இது.

உங்கள் சிந்தனை என்னும் ஜலப்பரப்பில் எறியப்படும் சிறிய கல் ஹைக்கூ.

நம் தின வாழ்வில் ஆச்சரியகரமான வசீகரமான பரவசமான சோகமான கணங்கள் பலப்பல உள்ளன. காலை நடந்து செல்லும்போது குட்டி நாய் ஒன்று உங்களைப் பார்த்து வாலாட்டுகிறது. அல்லது ஜன்னல் வழியாக ஒரு குழந்தை எட்டிப் பார்த்துச் சிரித்துவிட்டு டாட்டா காட்டுகிறது. பஸ்ஸில் ஒரு கணம் அந்த இளம் பெண் உங்களை அதிகபடியாகப் பார்க்கிறாள். முற்றிலும் அன்னியர் ஒருவர் ஓடிவந்து பஸ் கிடைத்த சந்தோஷத்தில் உங்களைப் பார்த்து

புன்னகைக்கிறார். திடீர் என்று காய்ந்த சருகுகளை குப்பைத் தொட்டியில் போட்டுக் கொளுத்தும்போது மூக்கில் படரும் வாசனை உங்களுக்குப் பிடித்திருக்கிறது. அலுவலகத்து மாடிப்படியில் ஒரு வருடன் மோதாமல் தப்பிக்கிறீர்கள். அல்லது மோதிக்கொண்டு லேசாக நெற்றியில் வலிக்க தடவிக்கொள்கிறீர்கள். இவ்வாறு எத்தனை கணங்கள்! உன்னதக் கணங்கள், சின்ன சின்ன இன்ப துன்பங்கள் நமக்கு இறைவன் பரிசுப் பொருட்கள் போல தினம் தினம் கிடைக்கின்றன.

ஹைக்கூ எழுதுவதும் படிப்பதும் இவ்வகையான கணங்களை மற்றவருடன் பகிர்ந்துகொள்வதுதான். அனுபவம் உணர்வு இரண்டையும் பிறருக்கு தர முயல்வதுதான் ஹைக்கூ.

சொல்லப் போனால் கலை இலக்கியம் எல்லாவற்றிற்குமே இதுதான் குறிக்கோள். கலைஞனும் கவிஞனும் தமக்குக் கிடைத்த அனுபவங்களை வரைந்தோ, எழுதியோ மற்றவர்களுக்குச் சொல்வது தான்... அந்த அனுபவ வார்ப்புக்கள் சில சமயம் நேரடியாக இருக்கின்றன, சில சமயம் மறைமுகமாக, உயிர் வாழ்தலில் உள்ள சிலிர்ப்புக் கணங்களை, உன்னதங்களை நாம் எத்தனையோ முறை கண்களில் வெளிப்படுத்துகிறோம். விளையாட்டு வீரன் வெற்றி பெறும்போது துள்ளிக் குதிக்கிறான். அல்லது கையை உயர்த்தி வானைக் குத்துகிறான். வியப்பில் புருவங்களை உயர்த்துவது, சட்டென்று வாய் திறப்பது, அட என்று வியப்பது, கை தட்டுவது போன்ற அத்தனையும் ஒரு உன்னதக் கணத்தை சந்தித்ததின் வெளிப்பாடுதான். இவைகளில் ஹைக்கூவும் ஒன்று.

ஹைக்கூ என்பது ஜப்பானிய வார்த்தை. இப்போது சர்வதேச வார்த்தையாகி அத்தனை அகராதிகளிலும் இடம் பெற்றுவிட்டது. அதனால் இந்த வார்த்தையை தமிழிலும் சேர்த்துக்கொள்வோம். சிறுகவி, குறும்பாகவிப்பொட்டலம் இந்தப் பேச்செல்லாம் வேண்டாம் ஹைக்கூ. கடைசி உகரம் சற்று நீண்டது. குறிலில் எழுதினாலும் பாதகமில்லை.

ஹைக்கூ என்பதற்கு அர்த்தம் என்ன? சேம்பர்ஸ் அகராதி. 5,7,5 அசைகள் (Syllables) கொண்ட ஜப்பானிய கவிதை என்கிறது. இது வெறும் வார்த்தை வருணனை. ஹைக்கூ ஒரு அனுபவம். தனியே இருக்கும்போது வானத்திலோ, வீதியிலோ, வீட்டிலோ ஒரு விந்தையான சமாசாரத்தைப் பார்த்ததும் உடனே தெரிந்தவரைக் கூப்பிட்டு, ‘அட! இதை வந்து பாரு’ என்று சொல்கிறாமே, அதுபோல் ஒரு அனுபவப் பங்கீடு. வியப்பு என்பதை மற்றவருக்கு சுட்டிக் காட்டும் விருப்பமே ஹைக்கூ.

அப்படிச் சுட்டிக்காட்டும் வடிவம் கவிதை. ஒரு சிறிய பூப்போன்ற மூன்று வரிக் கவிதை. ஒரு ஹைக்கூ எழுதும்போது, “எனக்கு ஒரு அனுபவம் ஏற்பட்டது. அதை உன்னுடன் பகிர்ந்துகொள்ள விரும்பு கிறேன். அந்த அனுபவத்தை, என்னில் ஏற்படுத்திய சம்பவத்தை

மட்டும் உனக்குச் சொல்கிறேன். அதே மாதிரி அனுபவம் அல்லது உணர்ச்சி உனக்கு ஏற்படுகிறதா பார்" என்று சொல்கிறோம்.

அனுபவம் அல்லது உணர்ச்சி கடத்தல் ஹைக்கூ. ஒரு சில வார்த்தைகள் மூலம்:

முன்பனி இரவில்
யாத்ரிகனின்
ஊசி நூல் தையல்.

கொ ப யாஷி இஸ்ஸா என்ற 18–ம் நூற்றாண்டுக் கவிஞனின் இந்த ஹைக்கூ மூன்று நூற்றாண்டுக்களைக் கடந்து எத்தனை உணர்ச்சிகளைக் கடத்துகிறது என்பதை எண்ணிப் பாருங்கள்.

இரவில் விளக்கு வெளிச்சத்தில் ஊசி நூலால் தைக்கும் ஒருவனைப் பார்க்கிறோம். அவன் தனிமையானவன், அவனுக்கு மனைவியோ மகளோ உடன் இருந்தால் எதற்காக கிழிந்த துணியை அவனே தைத்துக்கொண்டிருக்க வேண்டும்? அந்தக் காலங்களில் ஆண்கள் துணி தைத்ததில்லை. கிழிந்த துணியை திரும்பத் திரும்ப தைக்கும் அளவுக்கு ஏழை அவன் . . . அவ்வப்போது அவன் தையல் ஊசி விளக்கு வெளிச்சத்தில் மின்னுகிறது . . .

எத்தனை படிமங்கள் மூன்று வரியில்!

இதேபோல் கீழ்க்காணும் வரிகளையும் யோசித்துப் பாருங்கள்:

என் தொப்புளில்
ஒரு கடல்துளி
அதில் பிரதிபலிக்கும்
விளையாட்டரங்கம்!
சாயங்கால இருட்டு
கதவோர மலர் வளையம்
காற்றில் எழுகிறது
சாக்கடையில்
மிதக்கும் முகமூடி
மெல்லத் தலையசைக்கிறது!

ஹைக்கூ எழுதியவனின் அனுபவமும் அதைப் படிப்பவரின் அனுபவமும் ஒத்துப் போக வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. அவரவர் நினைவுகளுக்கு ஏற்ப ஹைக்கூ தரும் அனுபவம் வேறுபடலாம். முன்பனி இரவில் யாத்ரிகனின் ஊசி நூல் நான் குறிப்பிட்டதை போலில்லாமல் உங்களுக்கு வேறு வித ஞாபகங்களைத் தரலாம். நீங்கள் பார்த்த யாத்திகர்கள், ஊசி நூல், முன்பனி எல்லாமே படிம அளவில் வேறுபடலாம்.

முக்கியம் ஹைக்கூ சிறிய எளிய வரிகள் தரும் நீண்ட சிந்தனைத் தொடர். இந்த சிந்தனைத் தொடரை அதிகம் சிறைப்படுத்தாமல் இருக்கவே ஹைக்கூவின் வரிகள் எளிமையாகவும் சிறியதாகவும்

உள்ளன.

ஹைக்கூ ஒரு நெருப்புக் குச்சி.

மனமெனும் மருந்துச் சரத்திற்கு அருகே உரசப்படும் சிறிய நெருப்புத் துண்டு.

மேலும் நம்மைப் பாதிக்கும் சிறிய, அந்தரங்க விஷயங்களை பிறருடன் ஹைக்கூ மூலம் பகிர்ந்துகொள்ளும் போது நம் அந்தரங்க உலகில் அவர்களை அனுமதிக்கிறோம். எனக்குக் கிடைத்த எண்ணங்கள் உனக்கும் ஏற்படும்போது நானும் நீயும் ஒன்றாகிறோம்.

ஹைக்கூ உன்க்கும் எனக்கும் ஒரு சின்னப் பாலம். இந்தப் புத்தகத்தில் ஹைக்கூவின் அத்தனை பரிமாணங்களையும் சொல்லப் போகிறேன்.

ஹைக்கூ என்பது
என் சட்டைப்பைக்குள்
ஒரு கவிதை.

2. ஒரு விரைவான வரலாறு

ஜப்பானிய கவிதைக்கு பலவித மரபுகள் உண்டு, ஒரு விதத்தில் தமிழ் போல. ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா என்பதுபோல ஒவ்வொன்றுக்கும் வடிவம், அசை, சீர்க் கணக்கு உள்ள பா வகைகள் ஜப்பானிய மொழியில் உள்ளன. மேலும் தொல்காப்பியம், நன்னூல் இவைகளை முழுமையாக ஆராய்ந்தால் ஆசிரியப்பா என்பது ஒரு வடிவம் மட்டும் அல்ல, குறிப்பிட்ட சில கருத்துக்களையும் அவை தரிக்கும் என்பது தெரியவரும். நவீன கவிதை இயலில் இவையெல்லாம் மயங்கி வருகின்றன. அம்மானை, பிள்ளைத் தமிழ், பாலை, குறவஞ்சி போன்ற நூல்வகைகளுக்கெல்லாம் கருத்து கட்டுப்பாடு இருப்பது போல ஜப்பானிய பா வகைகளுக்கும் உண்டு. தோ தோ இட்ஸூ (Dodoitsu) என்பது தொழில் அல்லது காதல் பற்றிய நாட்டுப்பாடல். ஏழு ஏழு ஏழு ஐந்து அசைகளைக் கொண்ட பாடல். இப்படி கவிதைக்கு கவிதை வடிவமும் தமிழ் போலவே இருக்கிறது. ஒரே ஒரு வித்தியாசம். நம் அசை, சீர், தளை, அடி, பா போன்ற சம்பிரதாயங்கள் அவர்களுக்கு இல்லை. ஜப்பானில் ஓன்ஜி என்று சொல்வது ஒரு அசை, ஒரு எழுத்து . . . ஜப்பானிய கவிதையில் அசைக்கு சிறிய அளவு. லத்தீன் மொழியில் மோரா என்பார்கள். தமிழில் நேரசைக்கு ஈடானது ஓன்ஜி. இதை ஒரு ஓசையை அல்லது ஓசைகளை ஒரு சித்திர எழுத்தில் எழுத இயலும். ஜப்பானிய கவிதைகள் அனைத்தும் ஓன்ஜி கணக்கில் இருக்கும்.

> ஃபுரு இகே யா – **பழைய குளம்**
> கலா தோபி கோமு – ஸூ
> **தவளை குதிக்கையில்**
> மிஸூ நொ ஓதோ – **தண்ணீரின் சப்தம்**

இதை நம் தமிழ் சீர் வரிசைப்படுத்தி ஃபுரு இகேயா என்பதை நிரை நிரை நேர் என்போம். பதிலாக ஜப்பானிய மொழியை ஃபு . . . ரு . . . இ . . .கே . . . யா தனித்தனி அசைகளாக்கி ஐந்து ஓன்ஜி என்கிறார்கள். இவ்வகையில் மேற்குறிப்பிட்ட கவிதை 5, 7, 5 ஓன்ஜிக் களாக அமைந்திருப்பது தெளிவாகும். இந்த 5 7 5 என்பது ஹைக்கூவின் வடிவம். ஆனால் எழுதும்போது ஜப்பானிய மொழில் இதை மூன்றாகப்

பிரித்து மூன்று அடிகளாக எழுதுவதில்லை. ஜப்பானிய மொழி வினோதமான மொழி. அதன் எழுத்துக்கள் பட எழுத்துக்கள். அர்த்தமுள்ள முழுவார்த்தை கூட ஒரு எழுத்தாக இருக்கும். இது பழைய ஜப்பானிய மொழி. நவீன ஜப்பானிய மொழிக்கு இந்த சித்திர எழுத்துக்கள் போதாமல் தனியே அர்த்தமில்லாத ஒலிக்குறிப்பு எழுத்துக்களையும் சேர்த்துக் கொண்டார்கள். காஞ்சி, கானா என்று இருவகை எழுத்துக்கள் இவ்வாறு ஏற்பட்டன. இந்த கானா இருவகை உண்டு. கடகானா ஹிரகானா. இந்தக் குழப்பம் போதாதென்று ஜப்பானிய மொழியை மேலிருந்து கீழாகவும் எழுது கிறார்கள். சில சமயம் இடமிருந்து வலமாக... மேலிருந்து கீழ் எழுத்துள்ள புத்தகங்களை உருது போல் கடைசிப் பக்கத்திலிருந்து வாசிக்கிறார்கள்.

எழுதும் மொழியில் இத்தனை குழப்பமும் அசௌகரியமும் இருந்தும் ஜப்பானியர்கள் தலைசிறந்த தொழில் முன்னேற்றம் பெற்றிருப்பது ஆச்சரியம்தான்.

ஹைக்கூ கவிதையை ஜப்பானியர்கள் பெரும்பாலும் மேலிருந்து கீழ்தான் எழுதுகிறார்கள். பாஷோவின் உலகப் பிரசித்தமான ஹைக்கூ (முன் பக்கத்தில் குறிப்பிட்டது) இப்படித்தான் எழுதப்படும்.

எனவே மூன்று அடிக் கவிதையென்று ஹைக்கூவை சொல்ல முடியாது. அடி வரையறையெல்லாம் மேற்கத்திய மொழிகளின் இடம் வலமாக எழுதப்படும் வடிவத்திற்கு கொடுக்கும் சலுகை. சம்பிரதாய ஹைக்கூ ஒரு தூண்போல் ஒரே வரியில் நிற்கும்.

நவீன ஜப்பானிய கவிஞர்கள் தம் ஹைக்கூவை மேற்கத்தியப் பாணியில் எழுதத் தலைப்பட்டபோது கூட அவர்கள் எழுதும் விதம், வரிகளைப் பிரிக்கும் இடம் மூன்றடி வடிவத்தில் இருப்பதில்லை. ஜப்பானியர்கள் மிகுந்த அழகுணர்ச்சி, அலங்கார குணம் உள்ளவர்கள். அவர்கள் எழுத்துக்களும் படங்கள் போல். எனவே ஹைக்கூவை அமைக்கும்போது ஒரு வீடு போலவோ பாலம் போலவோ ஒரு வடிவத்தில் அமைக்கத்தான் முயற்சிக்கிறார்களே தவிர அறுதியாக மூன்று அடிகளாகப் பிரிப்பதில்லை.

மூன்றடி பிரிவு மேற்கத்திய சௌகரியம். ஜப்பானிய ஒலிகள் ஆங்கில ஒலிகளைக் காட்டிலும் சுருக்கமானவை.

5, 7, 5 ஓன்ஜி ஒலிக்குறிப்புகளின் அளவுக்கு ஆங்கிலத்தில் நேரடியாக மொழிபெயர்க்க முடியாது. தமிழில் ஒரு ஹைக்கூவின் ஒன்றுக்கு ஒன்று வடிவம் வேண்டுமென்றால்,

ப	ழை	ய	கு	ளம்
1	2	3	4	5

த	வ	ளை	கு	திக்	கை	யில்
1	2	3	4	5	6	7

த ண்ணீ ரில் சப் தம்
1 2 3 4 5

இவ்வாறு நேர் அசைகளாகக் கணக்கு வைத்தால் தமிழில் ஹைக்கூ வடிவத்தைப் படிக்க முடியும். இது தேவைதானா என்பதைப் பற்றி தமிழில் ஹைக்கூ என்கிற அத்தியாயத்தில் விவரமாகப் பேசலாம். இந்தப் புத்தகத்தைப் பொறுத்தவரை ஹைக்கூவின் மொழி பெயர்ப்புக்களில் இந்த *5, 7, 5* வடிவத்தை அமைக்க நான் சிரமப்பட வில்லை. பாடலின் தொனி மட்டுமே என் குறிக்கோள். ஆனால் மூன்றடி மேற்கத்திய ஹைக்கூ வடிவம் தமிழில் சாத்தியம் என்பது நம் தமிழ் மொழியின் சிறப்பு.

காதுக்கு இனிமைக்காக ஓசை நயத்துக்காக பேச்சு ஜப்பானிய மொழியில் வாக்கியங்கள் இயல்பாக பன்னிரண்டு சிறிய சப்தங்களாகப் பிரித்தபோது கவிதை வடிவம் பிறந்தது எனலாம். இந்த பனிரெண்டு சிறிய ஒலிக் குறிப்புக்களும் இயற்கையாக தன்னிச்சையாக ஐந்து ஏழு எனப் பிரிந்தபோது அழகாக அமைவதை அவர்கள் கண்டு கொண்டார்கள்.

த ன த ன ன
1 2 3 4 5

த ன ன த ன ன ன
6 7 8 9 10 11 12

இப்படிப்பட்ட அமைப்பில் ஒரு உற்சாகம், ஒரு துடிப்பு இருப்பதை உணரலாம். இம்மாதிரி பன்னிரெண்டு பன்னிரெண்டு ஒலிகள் ஒவ்வொன்றும் *5, 7* என்று பிரித்தவைகளை மூன்றிலிருந்து நூறு வரை சேர்த்து அந்தக் கவிதையை சோக்கா (நீண்ட கவிதை) என்று சொன்னார்கள்.

கீழ்க்காணும் கவிதை சோக்கா

ஃபுயு கொ பொரி ஹரு சரிகுரெ பா
தன தனன தன தன தனன

அஷிடா நிலா ஹிரத்ஸுயு ஒகி
யுபே நில கஸுபி தன பிகு
ஹத் ஸுஸ தெயோ கொண ரெ காளிதானி
உரு கிஸு நகு மோ . . .

குளிர் காலம் வசந்தத்துக்கு சுதந்திரம் தருகையில்
காலை நேரம் வெண்பனி விழுகிறது
மாலை நேரம் மூடுபனி விரிகிறது
ஹத்ஸுஸேயில் மரக்கிளைகளில்
குயில் பாடுது.

இந்தக் கவிதையை எழுதியவர் யார் எனத் தெரியாது. மன்யொஷு என்கிற எட்டாம் நூற்றாண்டு ஜப்பானிய கவிதைத் தொகுப்பில்

இருக்கிறது. இந்தக் கவிதை இந்தக் தொகுப்பில் பல பாக்களில் 'தன்கா' என்கிற வடிவில் இருக்கின்றன. தன்கா என்பது 'சோக்கா' போலத்தான். ஆனால் சிறிய பாடல். தன்கா என்பதே 'சிறிய பா' என்றுதான் பொருள். தன்காவில் பனிரெண்டு பனிரெண்டாக இரண்டு வரிகளும் இறுதியில் ஏழு ஒலி வரியும் உண்டு. உதாரணம்;

பருவக்காற்று குளிர்ந்துவிட்டது
அருகருகே குதிரைகளில் போகலாம் வா.
நீலமலர்கள் பறிக்க.

ஹிதோ மோரோ என்கிற பிரசித்திபெற்ற மன்யோஷா கவிஞனின் பாடல் இது.

இந்தக் கவிதையில் முதல் 'வரி'யில் இறுதியில் கருத்து மாறுகிறது. பருவக்காற்று குளிர்ந்துவிட்டது. குதிரையேறி மலர்களைப் பறிக்கப் போகலாம் வா! என்று இரண்டு கருத்து தெரிவிக்கப்பட்டு, மாறுதல் முதல் வரியின் இறுதியில் நிகழ்கிறது. பத்தாம் நூற்றாண்டு கொகின்ஸு இப்படி மற்றொரு கவிதைத் தொகுப்பில் தன்காவானது, சற்றே மாறிப் போய் மேற்சொன்ன கருத்து மாற்றம் இரண்டாம் வரியின் பாதியில் நிகழ்கிறது.

இளைப்பாற இடம் கிடைத்து மலையிடை இரவு உறங்கினேன்; என் கனவில்கூட மலர்கள் விழுந்தன.

இதில் இரவு உறங்கினேன் என்பதுடன் முதல் கருத்து முடியும் இடம் இரண்டாவது வரியின் பாதியில் இருப்பதை கவனிக்கலாம். ஒரு சில விதிவிலக்குகள் இருந்தாலும் தன்காவின் வடிவம் பெரும் பாலும் மேற்சொன்ன இரண்டு வகைதான்.

தன்கா உருவத்தில் மட்டுமின்றி உள்ளடக்கத்திலும் தனிப்பட்டு விளங்குகிறது. கி.பி. 700லிருந்து 1200 வரை ஐந்து நூற்றாண்டுகளுக்குக் காதலை உணர்த்தும் கவிதைகள் தன்காவில் மிகுந்திருந்தன. காதலர்கள் கடிதப் போக்குவரத்தை தன்காவின் மூலம் வைத்துக்கொண்டனர். ஆரம்ப நாட்களில் இயற்கை வருணனைக்கும் பயன்பட்டன. அரசவை களில் பலருக்கு கவிதை எழுதத் தெரிந்திருந்தது. காதலும் இயற்கையும் கலந்த இவ்வகைப் பாடல்களை ஒரு விதத்தில் தமிழின் அகத்திணைப் பாடல்களுடன் ஒப்பிடலாம்.

எண்ணங்கள் தாங்காமல்
அவள் வீட்டுக்குச் செல்லுகையில்
குளிர்கால இரவின்
நதிக்காற்றின் குளிரில்
பறவைகளின் அழுகை.
உனக்காகக் காத்திருக்கும்
ஏக்கத்தில்
சாளரத்தை நகர்த்த
வீட்டினுள் காற்றடிக்கும்.

இயற்கையும் மனநிலைகளும் இவ்வாறு கலந்தன. இவ்வாறு ஐந்து நூற்றாண்டுகளில் 33000 தன்கா கவிதைகள் எழுதப்பட்டன. பழங்கால ஜப்பானிய சமூகங்கள் சின்னச் சின்ன பிரபுத்துவங்களாகவும், அரசவைகளாகவும் இருந்தபோது தன்கா வடிவம் அவர்கள் அரண் மனைக் காதலையும் கலை உணர்ச்சியையும் பிரதிபலிக்க மிகவும் வசதியாக இருந்தது. நவீன ஜப்பானில் இவ்வகை பிரபுத்துவங்கள் மறைய கவிதைத் திறமை அரண்மனைகளிலிருந்து வெறும் மனை களுக்கு மாறுகையில் வடிவங்களும் மாறின. ரெங்கா என்ற ஒரு வடிவம் தோன்றியது. ரெங்கா என்பது ஒரு கூட்டுறவு முயற்சி. ஒரு கவிஞன் ஒரு கவிதை ஆரம்பிக்க, மற்றவன் அதன் தொடர்பாக மற்றொரு கவிதை சொல்ல, அதற்கடுத்தவன் அதை இணைத்து மூன்றாவது சொல்ல, இப்படி ஒரு விதத்தில் நம் அந்தாதி போல் (பலர் சொல்லும் அந்தாதி) கேள்வி பதில் போல அமைந்தது ரெங்கா – மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட கவிஞர்கள் கூடிப் பேசி எழுதும் கூட்டுறவுக் கவிதை ரெங்கா. ஒவ்வொருவர் கவிதையும் ஒரு தன்கா வடிவத்தில் இருக்கலாம். இப்படி 50லிருந்து நூறு கவி தைகள் தொகுத்து ஒரு ரெங்கா. சிலவேளை ஆயிரம் கூட உண்டு.

ரெங்கா என்பது தொடர்கதை போல அல்ல; ஒரு பாடல் ஒரு திசையில் செல்ல, அடுத்த பாடல் அதிலிருந்து இணைத்து வேறு திசையில் செல்லலாம். இவ்வகையில் ரெங்காவில் பலப்பல படிமங்கள் கிடைக்கும். நிஷோ யோஷிமோடோ (1320–1388) ரெங்காவின் விதிகளை அமைக்கையில் முன்னோடிகள் இல்லாததால் ஒரு ரெங்கா கவிதை "மக்களை மகிழ்விக்க வேண்டும். சமகால உணர்வுகளைத் தூண்ட வேண்டும்" என்றார்.

ரெங்காவின் ஆரம்பப் பாடலாகத்தான் முதல் ஹைக்கூ தோன்றி யது. அவையடக்கம் போல அல்லது ஆரம்ப விறுவிறுப்புக்காக ஒரு சிறிய காட்சியை சித்தரிக்கும் சின்னக் கவிதையாகத் தோன்றியது. பிற்காலத்தில் இவை ரெங்காவின் அறிமுக ஸ்தானத்திலிருந்து பிரிந்து தனியாட்சி பெற்றன. நவீன ஹைக்கூ தோன்றியது. தன்கா போல அல்லாமல் 5, 7, 5 என்று பதினேழு அசைகளுடன் சட்டென்று முடிந்துவிடும். சற்றே குறைபட்ட இந்த வடிவம்தான் நவீன உலக இலக்கியத்தின் அத்தனை மொழிகளிலும் பாதிப்பு ஏற்படுத்தி இன்றைய தினம் ஐரோப்பிய, கிரேக்க, ப்ரெஞ்சு, தென் அமெரிக்க, ஆப்பிரிக்க, இந்திய மொழிகள் அனைத்திலும் ஹைக்கூ எழுதப்படுகிறது.

இப்படி பதினேழு அசைகள் கொண்ட ஹைக்கூவில் நிறைய சமாசாரங்கள் உண்டு. அதில் ஒன்று 'கிரெஜி' அல்லது வெட்டு வார்த்தை. ஹைக்கூவின் 17 அசைகளில் 12வது ஒரு வெட்டு, ஒரு தயக்கம், ஒரு வித முடிவு வேண்டும். முற்றுப்புள்ளி கமா போன்று வாக்கியத்தை அறுதியிடும் குறியீடுகளை நாம் படிக்கும்போது உச்சரிப்பதில்லை. ஆனால் கிராஜி அப்படியில்லை; அது உச்சரிக்கப் படும் குறியீடு. ஒரு வகையான விகுதிச்சொல். இந்த கிரெஜி 12–

வது அசையில் வந்து அங்கிருந்து ஒரு கருத்துத் திருப்பம் ஏற்படுத்த வேண்டும்.

ஃப்யுஜி மலைமட்டும்
புதைபடாமல் நிற்கிறது *(கிரெஜி)*
இளம் இலைகள்.

○

அழகான பட்டம்
வானேறிவிட்டது *(கிரெஜி)*
பிச்சைக்காரன் குடிசைமேல்

கிரெஜி, பாடலின் நடுவிலும் நிகழலாம் அல்லது முதல் ஐந்தாவது அசைகளுக்கு அப்பாலும் நிகழலாம். இருக்கும், இருக்கலாம், இருக்கிறது போன்ற விகுதிகளுக்கு ஈடாகச் சொல்லலாம்.

எனவே சம்பிரதாய ஹைக்கூ இரண்டு பகுதியாகப் பிரிந்தது. பன்னிரெண்டு அசைகள். ஐந்து அசைகள் என்று. 5, 12 அல்லது 12, 5 என்று இருவகையாகப் பிரிக்கலாம். அதனால் ஹைக்கூவை 5, 7, 5 என்று அசைகளாகப் பிரிப்பது.

ஹைக்கூவுக்கு வார்த்தைகள் இலக்கண சுத்தமாக இருக்க வேண்டிய தில்லை. விஷயத்தைச் சொன்னவுடன் வார்த்தைகளைத் துறந்து விடும். ஹைக்கூவுக்கு ஏதாவது ஒரு பருவத்தைக் குறிப்பிடும் "கிகோ" வார்த்தை ஒன்றும் வரவேண்டும்.

உறுமும் இடியும்
நதியின் அடியில்
சிதறும் மீன்கள்.

3. ஜப்பானிய ஹைக்கூ

ஜப்பானிய ஹைக்கூவின் பிதா மகன்கள் என நான்கு பேரைச் சொல்கிறார்கள். மார்ஸுவோ பாஷோ (1644–1694), யோஸா பூஸான் (1716–1784), கொபயாஷி இன்ஸா (1762–1826), மாஸஒகா ஷிகி (1867–1902)

பாஷோ என்பவர் அவருக்கு முன் வாழ்ந்த ஒரு புத்தபிக்குவின் தனிமை ததும்பும் தன்கா வகை கவிதைகளால் கவரப்பட்டு அதன் பாதிப்பில் ஹைக்கூ அமைத்தார்.

விருந்தினர்கூட
மறந்து விட்ட
மலையடி கிராமம்.

●

தனிமை இலையெனில்
வாழ்வில் சுகமில்லை.

●

பழைய கிணறு
தவளை குதிக்கையில்
தண்ணீரில் சப்தம்.

என்று ஜப்பானிய மொழியில் மிகப் பிரபலமான ஹைக்கூ.

தவளைகளைப் பற்றிய கவிதை ஜப்பானிய மொழியில் மிக அதிகம். பாஷோ வரும் வரை தவளை கத்தும்போது ஏற்படும் விதவிதமான சப்தங்கள் தாம் கவிதைகளாக வந்தன. முதன் முறையாக தவளை துள்ளும்போது ஜலத்தில் ஏற்படும் 'ப்ளக்' சப்தம். கவிதை அமைப்பில் ஒரு துள்ளலையும் வேகத்தையும் கொண்டு வந்ததில் இது ஒரு முன்னோடி.

பாஷா, கவிதையும் அனுபவமும் ஒன்றிப் போக வேண்டும் என்று நம்பினார். மூங்கிலைப் பற்றி மூங்கிலிடமிருந்தே தெரிந்து

கொள் என்றார். உண்மையான கவிதை அனுபவம் அதன் கருப் பொருளின் சுபாவத்திலிருந்தே வர வேண்டும் என்றார். பழங்கால யுத்தம் நடந்து முடிந்து, மைதானத்துக்குச் சென்றபோது அங்கு புல் முளைத்துப் பசுமையாக இருந்ததைப் பார்த்து,

கோடைப் புல்வெளி
அந்த மாவீரர்களின்
கனவுப் பாதைகள்

என்று எழுதிய ஹைக்கூவும் பிரசித்தமானது. ஒரு பொருளை மேலாகப் பார்த்தால் மட்டும் போதாது; கவித்துவத்துக்கு ஆழமாக அந்தப் பொருளின் உள்ளே நோக்க வேண்டும். பார்க்கிறதை வெறுமென வருணனை மட்டும் அந்தக் காட்சியின் உள் அர்த்தத்தைப் பிடிக்க முடியாது என்று போதித்தார். பாஷோ, "எழுதும்போது உனக்கும் உன் கருப்பொருளுக்கும் ஒரு மயிரிழைகூட இடைவெளி இருக்கக் கூடாது. உள் மனதை நேரடியாகப் பேசு . . . எண்ணங்களை கலைய விடாமல் நேராகச் சொல்" என்றார். எழுதும் வார்த்தை கவிதை வடிவம் என்பது நேரடியாக கவிஞனின் மனதைத் தொடுவதற்கு ஏற்பட்ட சாதனம். அதேபோல் அந்த மனத்துக்கும் அவன் எழுதிய பொருளுக்கும் ஒரு நேரடித் தொடர்பு உண்டு. பொருள் – கவிஞன் மனம் – கவிதை – மற்றவன் மனம் இவ்வாறு உணர்வு வெளிப்பாடு, மாற்று உணர்வு என்று ஒன்றுபட்ட நிகழ்ச்சியே கவிதை. படிப்பவர்க்கு கவிதையும் கவிஞனின் மனமும் ஊடுருவி எழுதுப்பட்ட பொருளின் உள் நிஜமும் புலப்பட வேண்டும் என்பது. பாஷோவின் சித்தாந்தத்தைப் பலவிதங்களில் எல்லா ஹைக்கூ கவிஞர்களும் அடைய முற்பட்டிருக் கிறார்கள்.

பாஷோவின் பல கவிதைகள் பிரசித்தமானவை. மணிக்கணக்காக ஏறி ஒரு கரடு முரடான மலை உச்சியில் உள்ள கோவிலை அடைந்ததும் அவர் அமைத்த,

நிசப்தம்
கற்களில் ஊறிவிட
பூச்சிகளின் சப்தம்!

என்ற ஹைக்கூ அவைகளில் ஒன்று.

பாஷோ தான் எழுதிய சிறு கவிதைகளை ஹொக்கு என்று சொன்னார். ஹொக்கு என்றால் ஆரம்பச் செய்யுள். நாம் முன்பு சொன்னபடி ஹைக்கூ ரெங்கா வடிவத்தின் ஆரம்பச் செய்யுளாக முதலில் தோன்றியது. பாஷோ மற்றொரு வடிவத்தில் பெயர் பெற்றவர். 'ஹைபுன்.' இது உரைநடை வடிவத்தில் ஹைக்கூ. இதுபற்றி மற்றொரு தனிப்பட்ட அத்தியாயம் உள்ளது.

ஹைக்கூ, ஹொக்கு, ஹைக்கூ–தோ–ரெங்கா (நகைச்சுவைத் தொடர் கவிதை) ஹை புன் – இவையனைத்தையும் ஹைக்கை என்கிற ஒரே

பெயரின்கீழ் சேர்த்திருக்கிறார்கள்; பலவித விருத்தவடிவுகள் இருப்பது போல்.

பாஷோ ஹைக்கூவின் கம்பர்!

யோஸோ பூஸான் அடுத்த ஹைக்கூ கவிஞர். இவர் பாஷோவின் கட்டுரைகளைப் பிரதியெடுத்து அதற்கு படம் போட்டு சொந்தமாக சில ஹைக்கூவை தானே சேர்ந்து எழுதி பிரசித்தமானார். இவரது ஹைக்கூவில் ஒரு ஓவியனின் பார்வை அடிக்கடி தென்படும்.

1. **மாலைக் காற்றில்**
   கொக்கின் கால்களில்
   நீரலை ததும்பும்

2. **இலைகள் உதிர்ந்தன**
   தெளிவு நீர் உலர்ந்தன பாதை
   இங்கும் அங்கும்

இரண்டாவது கவிதை ஒரு சித்திரம்போல் இருப்பதை உணரலாம். இலையற்ற மரமும் கோடை வருவதை அறிவிக்கும் தாழ்ந்த நீர் அளவும் அங்கங்கே தெரியும் பாறைகளும் – ஒரு வாட்டர் கலர் சித்திரம் போல – பூஸானின் ஹைக்கூவில் சித்திரங்கள் மட்டுமில்லை,

1. **சூரியன் மறையத் தயார்**
   பாலமில்லை
   வசந்தகால வெள்ளம்

2. **திருடன்**
   மொட்டை மாடியில் மறைகிறான்
   இரவின் குளிர்

முதல் ஹைக்கூவில் ஏதே சின்னநதி, பாலமில்லாவிட்டாலும் கடந்து விடலாம் என்று எண்ணிக்கொண்டு சூர்யஸ்தமன வேளையில் வந்தபோது மழை பெய்த வெள்ளப் பெருக்கை சந்தித்ததின் ஆச்சரியம் இருக்கிறது.

திருடன் நடமாடுவதை உணர்ந்து அவசரமாக மொட்டை மாடிக்கு வந்து பார்த்தபோது திருடன் மறைந்துவிட அப்போதுதான் குளிர் உறைக்கிறது. கம்பளி போர்த்திக்கொள்ளாமல் வந்திருக்கிறார்கள்!

இவ்வாறு காட்சிகளை சிறைபிடித்த பூஸான் ஹைக்கூவின் இரண்டாவது கவியரசர்,

மூன்றாமவர் கொபயாஷி இன்ஸா (Gobayashi Insa). பாஷோ ஒரு முனிவர், பூஸான் ஒரு கெட்டிக்காரர் எனில், இன்ஸா நாட்டுப்புறக் கவிஞர். கிராமத்தின் அறியாமையும், எளிமையும் இவர் ஹைக்கூவில் உண்டு. சின்ன சின்ன பூச்சிகள், பறவைகள் பற்றி நிறைய எழுதினார். அவரது பிரசித்தமான,

கொல்லாதே
கைகளையும் கால்களையும்
தேய்த்துக் கொண்டிருக்கிறது
ஈ . . .!

சிறிய சிறிய ஜந்துக்களின் மேல் உள்ள அனுதாபத்தைக் காட்டுகிறது. நாம் முன்பு குறிப்பிட்ட

முன்பனி இரவில்
யாத்ரிகனின்
ஊசி நூல் தையல்

இன்ஸாவினுடைய ஹைக்கூவில் இன்ஸா ஏழ்மைகளையும் ஏழைகளையும் அதிகம் மிகைப்படுத்தாமல் காட்டுகிறார்.

செவிட்டு ஊமை பிச்சைக்காரனின்
பிச்சைப் பாத்திரத்தை
மழை தட்டுகிறது

இலையுதிர்க்கும் காற்றில்
பின்மாலையில் வீற்றிருக்கும்
தெருப்பாடகன்

கடைசியில் குறிப்பிட்ட கவிதையில் தெருப்பாடல்களைக் கேட்பவர்கள் அனைவரும் காற்றின் கடுமையில் விலகிப் போக அவன் மட்டும் தனியாகப் பாடும் காட்சி பொதிந்திருப்பதை உணரலாம், அப்படித் தான் எனக்குப்பட்டது. இன்ஸா பெண்களையும் எழுதியிருக்கிறார்.

இன்ஸாவின் சொந்த வாழ்க்கை சோகம் நிறைந்தது. சிறு வயதிலேயே அன்னையின் கவனிப்பை இழந்து, சித்தியின் கொடுமை, சொத்து பறிமுதல், குழந்தைகள் பிறந்து பிறந்து செத்துப் போனது என்று பல இன்னல்களுக்கு உள்ளானதால் ஆதங்கத்தினால் கவிதையில் சின்ன ஜந்துக்களுக்கு ஒரு அனுதாபம் அதிகம் இருந்தாலும் அவர் அதை மிகைப்படுத்தவில்லை. அமைதியும் அழகுணர்ச்சியும் மிகுந்த கவிதைகளும் எழுதியுள்ளார்.

குளிரில்
பிறை நிலா
குட்டை மாறுகிறது

காலைப் பனியில்
மலர்கள் விற்கும்
முரடன்

மாஸஒகா கிஷி சம்பிரதாய ஹைக்கூவின் கடைக்காவலர். நவீன ஹைக்கூவின் முன்னோடி என்கிறார்கள். சென்ற நூற்றாண்டின் இறுதியில் இருந்த கிஷிதான் முதலில் ஹைக்கூ என்கிற பதத்தை

பிரயோகித்தவர். முதல் முதல் ஹைக்கூ என்பது ரெங்காவில் ஆரம்பக் கவிதை வடிவத்தில்தான் எழுதப்பட்டது. கிஷியின் காலத்தில் ரெங்கா எழுதும் கூட்டுறவு வழக்கம் ஒழிந்து அதன் ஆரம்பப்பாவான ஹொக்குவுக்கு மட்டும் தனிப்பட்ட அடையாளம் கிடைத்து ஹைக்கூ வாக மாறியது.

கிஷி காச நோயால் கஷ்டப்பட்டவர். அவர் கவிதைகளில் ஒரு நோயாளியின் நுணுக்கமான பார்வை இருக்கும்.

மலர்ச் சாடியில் செருகித்
தொங்கும் நீலமலர்கள்
நோய்ப் படுக்கையில்
வசந்தம் இரவாகிறது

இது அவருடைய தன்கா, கடைசியில் இந்தக் கவிதை காட்சியிலிருந்து சிந்தனைக்கு மாறுவதை உணரலாம். ஹைக்கூ வெறும் காட்சியல்ல. காட்சிக்கு அப்பாலும் சிந்தனைகளைக் கிளற வேண்டும். கற்பனை வளமும் மென்மையான உணர்வுகளும் உள்ளவர்க்கு சில சாதாரண காட்சிகள்கூட பல படிமங்களைத் தோற்றுவிக்கும். அவர்களுக்கு எளிய வார்த்தைக் காட்சிகூட போதும்.

ஹைக்கூவில் கவிஞனிடம் வார்த்தைகளைப் பங்கிட்டுக்கொள் கிறோம். அந்த வார்த்தைகளால் நான் எப்படி பாதிக்கப்பட்டேன் என்று சொன்னால், உன் இயல்பின்படி நீ பாதிக்கப்படுவதைத் தடுத்துவிடும் என்றார் கிஷி. அதனால் ஹைக்கூவின் வார்த்தைகள் புற வார்த்தைகளாக இருக்கட்டும்; மன வார்த்தைகளாக இருக்கக் கூடாது என்றார்.

'திருடனைப் பார்க்கிறேன்' – இது ஹைக்கூ ஆகலாம். 'திருடனைப் பார்த்து அதிர்கிறேன்' – இது நிச்சயம் ஹைக்கூ ஆகாது.

அந்த அதிர்ச்சி உனக்கு. எனக்கு திருடனைப் பார்த்து சிரிப்புக்கூட வரலாம். அந்த விளைவை எனக்கு விட்டுவிடு.

பாஷோவின் யுத்தம் முடிந்தபின் புல்வெளியை பற்றிய ஹைக் கூவைப் பார்த்தோம். அதுபோல் கிஷியும் சீனாவில் யுத்த நிருபராக பணியாற்றியபோது,

இடிந்த வீட்டில்
யுத்தம் முடிந்த பின்னே
காய் மரம் பூத்திருக்கிறது.

கிஷி நேராகப் பார்த்த சம்பவங்களையும் பொருட்களையும் எழுது என்றார். கற்பனையை கூடியவரை தவிர்க்கச் சொன்னார்.

கோடை நதி
பாலம் இருந்தும்
குதிரை நீரில் நடக்கிறது.

துல்லிய தினத்தில்
எதனுடைய புகையோ
வானில் செல்கிறது

இன்ஸா வெண் பனியில் மறைய இவர் பனியிலிருந்து வெளி வருகிறார்.

பனியின் ஊடே
ஓடம் செலுத்தி வெளிவர
அகன்ற கடல்

இன்ஸாவிற்குப் பின் நவீன ஜப்பானிய ஹைக்கூ பிறந்தது என்று சொல்லலாம். அவருக்கு ஏகப்பட்ட சீடர்கள். காவா ஷி காஷி ஹெகி கோட்டோ (1872–1937) அதில் முக்கியமானவர்.

தூரத்தில் வாணங்களின்
வெடி சப்தம்
வேறு ஏதும் இல்லை

தவளைக் குரலை விட்டு அது நீரில் துள்ளும் ஒலியை சொன்னது போல வாண வேடிக்கை வர்ணங்களை விட்டு வெடிகளை மட்டும் சொல்கிறார்.

ஹெகிக்கோட்டோ ஹைக்கூவின் யாப்பு வடிவம் தொந்தரவாக இருக்கிறது என்று அதை மீறலாம் என்றார். புதிய வடிவ ஹைக்கூ சில சமயம் நீட்டினார்.

மனைவி இறந்து போய்
கீரை அடுக்கும்
வெங்காயம் அடுக்கும்
கணவனும் மகளும்

தகாஹடா கியோஷி (1884–1959) ஜப்பானிய *வானம்பாடி* பத்திரிகையின் ஆசிரியர். அதில் புதிய கதைகளும் கவிதைகளும் பிரசுரித்து வந்தாலும் வரம்பு மீறின ஹைக்கூ கவிதைகள் பிடிக்காமல் தன் பத்திரிகையில் மீண்டும் சம்பிரதாய (5,7,5) வடிவ ஹைக்கூவை பிரசுரிக்க ஆரம்பித்த கியோஷி ஹைக்கூவின் மூதறிஞர். அவரது பத்திரிகை *Hototogisu* (வானம்பாடி) இன்றும் அவர் மகனால் நடத்தப்படுகிறது. கியோஷியின் ஹைக்கூ பழைய வடிவம் மட்டுமின்றி பழைய கருத்துகளையும் கொண்டிருந்தன.

மழை நின்றதும்
கொஞ்ச நேரம்
காட்டு ரோஜா வாசனை
இந்த வசந்தம் கூட
யாத்திரை போக எண்ணி
முடிந்து விட்டது.

ஒகிவார செய்சென்ஸுய் Ogiwara Seisensui *(1884–1976)* சம்பிராய ஹைக்கூவுக்கு திரும்பச் செல்வதை சம்மதிக்காமல் *மேகங்கள்* என்ற தனிப் பத்திரிகை ஆரம்பித்து வெளியிட்டார், இவர் ஹைக்கூ மனபிம்பங்களையும் சொல்லலாம் என்றார்.

1. **கனவிலாது**
   இரவு உறங்கினேன்
   குருவிகளின் குரல்கள்

2. **பால்வீதி கூட**
   பிரகாசமாகத் தெரிய
   சொல்லிப் பிரிந்தோம்

முதல் கவிதையில் பட்சிக் குரல் கனவிலாத தூக்கத்தை அடிக் கோடிட்டுக்காட்ட, இரண்டாவது ஒரு காதல் கவிதை. காதலர்கள் ரொம்பநேரம் பேசிக்கொண்டிருக்க வானத்தின் லேசாக தீற்றல் போல இருக்கும் பால்வீதி கூட துல்லியமாகத் தெரியும் அளவுக்கு அவ்வளவு லேட்டாகி விட பிரிகிறார்கள்.

செய்சன்ஸுய் பத்திரிகை 'மேகங்கள்' மிகப் பிரபலமாக 'சுதந்திர ஹைக்கூ' பத்திரிகையாயிற்று.

தனேடா ஸந்தோகா (Taneda Santoka – *1882–1940)* நவீன வாழ்க்கை யைத் துறந்து கிராமங்களில் பரதேசி போல் திரிந்து கவிதை எழுதியவர். இஷ்டப்பட்டபடி வாழ்ந்து இஷ்டத்துக்கு எழுதினவர்களில் ஒருவர்.

பசுமையான உயரமான குன்றில்
மெல்ல ஒன்றுக்குப் போகும் சுகம்.

இது கொஞ்சம் அதிர்ச்சி தரலாம். இந்த மாதிரி சமாச்சாரங்கள் உள்ள ஹைக்கூ பல உண்டு. கலாய் ட்ஸு என்ற சீனத்து அறிஞர் ஒருமுறை கனவிலிருந்து எழுந்த போது ஒருமுறை குழப்பமாக இருந்தது. நான் வண்ணத்துப் பூச்சியாவதாக கனவு கண்ட மனிதனா? இல்லை மனிதனாவதாக கனவு கண்ட வண்ணத்துப் பூச்சியா? என்று சந்தேகம் ஏற்படும்.

கல்லில் தட்டாரப்பூச்சி
பகற்கனவு காண்கிறது

என்று எழுதிய சந்தோகாவின் ஹைக்கூ எளிமை வாய்ந்தவை. வடிவத்தைப் பற்றிக் கவலைப்படாதவை.

மர இலைகள் விழுகின்றன
நடக்க நடக்க . . .

ஒஸதிஹொ ஸாய் *(1885–1926)* நன்றாகப் படித்து சட்டப்படிப்பு முடித்து, வேலையில் இருந்தார். வீடு மனை எல்லாம் விட்டு உதறித்தள்ளி பிச்சை எடுக்கவும் கியோட்டா கோவில்களில் சின்ன

சின்ன காரியங்கள் செய்யும் வாழ்க்கையை தேர்ந்தெடுத்தார். இவரது இரண்டு வாழ்க்கைக்கும் பொதுவாக இருந்தது ஹைக்கூ.

1. **சரியாக அடிக்காமல்**
   ஆணியில் கழுத்தை
   வளைத்தது.

2. **பனி நின்றது**
   குழந்தைகளின் குரலில்
   சூரியன்.

3. **கடற்கரையில்**
   திரும்பிப் பார்க்கையில்
   என் காலடிச் சுவடுகள்கூட இல்லை

மூன்றாவது கவிதையில் 'என்' என்பது புதிது. ஹைக்கூ கவிதையில் நான், நீ, அதிகம் வராது. ஹொஸாயின் கவிதையில் என் காலடிச் சுவடுகள்கூட இல்லை என்பதில் ஒரு அழுத்தம் உள்ளது. இப்போது நான் நடந்து வந்த என் சுவடுகளே அழிந்து விட்டன. எனக்கு முன் நூற்றுக்கணக்கான தலைமுறைகளின் சுவடுகள்? என்ன மிக ஆழமான கருத்தைக் கூறுகிறது. நாகட்ஸுகா இப்பெகரொ (Nakatsuka Ippekaro) *(1887–1946)* நவீன விஷயங்களை ஹைக்கூவில் சொன்னார்... சம்பிரதாய ஹைக்கூவை ஒப்புக்கொள்ளவில்லை. சம்பிரதாய ஹைக் கூவுக்கு இரண்டு விஷயங்கள் முக்கியம். பதினேழு அசை *(5,7,5)* வடிவம் பருவக்குறிப்பு. நேரடியாகவோ அல்லது மறைமகமாகவோ ஹைக்கூ ஒரு பருவ காலத்தை வசந்தம், கோடை, குளிர் நாள் என்று குறிப்பிட வேண்டும். இது வரை நாம் பார்த்த 'பெரும்பா'லான ஹைக்கூவில் இவ்வித பருவக் குறிப்பைக் கவனித்திருக்கலாம். இப்பிகரோ இதெல்லாம் தேவையில்லை என்றார். நவீன ஹைக்கூக்காக இரண்டு பத்திரிகை நடத்தினார்.

கோடைக் காலை
ஏழைக் குழந்தை
பூசணிக்காயை
அணைத்துக் கொண்டும் இழுத்துக் கொண்டும்

என்று ஹைக்கூ வடிவத்தை மீறினார்.

ஹாஷிமோடோ டகாகோ (Hashimoto Takako) என்கிற பெண்மணி *(1894–1963)* கியோஷி போன்றவர்களிடம் பயின்று விலகிக்கொண்டார். ஒரு பெண்மை கலந்த சம்பவங்கள் ஹைக்கூவில் தோன்றத் துவங்கின.

குளித்து நனைந்து கூந்தல்
நான் போகுமிடமெல்லாம்
சொட்டுகிறது.

மிதக்கும் விளக்கில்
வார்த்தைகளை ஒப்படைத்து
தள்ளி அனுப்புகிறேன்.

நாகமுரா குஸடாஓ (1901–1983) தின வாழ்வில் மெல்லிய கணங்களின் புது அர்த்தங்களைப் பார்த்தார்.

இறந்த நண்பன்
தோளைத் தொடுவது போல
அறுவடை நாள் சூரியனின் உஷ்ணம்.
பிறைநிலா சுமந்து
நீர்வளையங்கள்
வரவிரும்புகின்றன.
வீடு எரிந்து
கான்க்ரீட் பாக்கியிருக்க
துள்ளும் பந்து.

கேடோ ஷுசன் (Kato Shusun) உலக யுத்தத்தால் பாதிக்கப்பட்டார்.

நெருப்பின நடுவில்
ஒருமலர் எரியும்
முறை தெரிந்தது.

என எழுதியது அவர் இருந்த வீட்டில் வானத்திலிருந்த ப்ளேன் மூலம் தாக்கி மனைவி மக்கள் பிரிந்தபோது.

ஹுசன் மென்மையான கவிதைகளும் எழுதியிருக்கிறார். ஸுகாரு என்கிற அதனை பிக்னிக் ஸ்தலத்துக்கு போனபோது,

என் தோளிலிருந்து விடைபெறும்
கோடைகால வண்ணத்துப் பூச்சி

குதிரையை அலம்பும்
பெண்ணின் கன்னம்
மெல்லச் சிவக்கிறது

என எழுதியிருக்கிறார்.

இதுவரை நாம் பார்த்த ஹைக்கூக்களின் உருவகங்கள் 'இது போல் இது' இல்லாததை நீங்கள் கவனித்திருக்கலாம்.

ஹைக்கூவுக்கு பெரும்பாலும் உருவகம் தேவையில்லை. எதனுடனும் ஒப்பிடும்போது பொருள் பற்றி சிந்திக்க வைத்து நம் கவனத்தை கலைப்பது ஹைக்கூவுக்கு உதவாது. இருந்தும் சிலர் உருவங்களைப் பயன்படுத்தவே செய்தார்கள். கனேகோ டோட்டோ என்பவர் ஒருவர்.

காலையிலிருந்து மாலைவரை
ஆற்றின் பற்கள் சப்தமிடும்

ஆற்றின் பல் என்பது உருவகம். இன்றைய நவீன ஜப்பானிய இலக்கிய உலகில் ஆயிரக்கணக்கில் ஜப்பானியர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஹைக்கூ படிப்பு, ஹைக்கூ கட்டுரைகளை எழுதும் பிரபல பத்திரிகைகள் உள்ளன. நூற்றுக்கணக்கான ஹைக்கூ சம்பவங்கள் உள்ளன. அவைகளை மாதா மாதம் சிறு பத்திரிகைகள் வெளியிடுகின்றன. நாம் இதுவரை சொன்ன பெயர்கள் எல்லாம் பிரபலங்கள் ஆகும். இன்றைய தினம் சின்ன குழுக்களில் வாழ்வில் பல்வேறு துறைகளில் இருப்பவர்கள் மகிழ்வுடன் ஹைக்கூ செய்கிறார்கள். நவீன ஜப்பானிய வாழ்வில் அத்தனை வேறுபாடுகளையும் உணர்ச்சிகளையும் சம்பவங்களையும் இவை பிரதிபலிக்கின்றன.

இததோரி என்ற பத்திரிகை மாதா மாதம் தன் முதல் பக்கத்தில் பத்து ஹைக்கூ வெளியிடுகிறது. பத்துபேர் எழுதிய பத்து கவிதைகள். சிலவற்றைப் பார்ப்போம்.

சாலமன் மீன்களில்
அதிகம் துள்ளுவதை
நான் பிடிக்கிறேன்.

உப்புபோட்ட
முள்ளங்கி வாசனை
நானும் நிலவும்.

குளிர்நாள் நட்சத்திரங்கள்
சொந்தஊர் நதி
சதா முணுமுணுக்கும்.

பீங்கான் நாய்
முழுநாள் தனிமை
என்னைப் பார்க்கிறது

அரிசி மூட்டைகள்
மழையால் சரியும்
சப்த எதிரொலி.

ஜப்பானில் இன்று எல்லாவகை கவிதைகளும் பாடல்களும் உள்ளன. தன்கா கூட சிலர் எழுதுகிறார்கள். ஆங்கில லிமரிக் போல பாடல்களும் இருக்கின்றன. நாட்டுப் பாடல்கள் உள்ளன. மேலும் சென்ற நூறு ஆண்டுகளாக யாப்பு விடுத்த புதுக்கவிதை வசனக் கவிதைகளும் உள்ளன. அந்த புதுக்கவிதை இயக்கம்தான் இன்று ஜப்பானிய மொழியில் மற்ற மொழிகளில் உள்ளது போல பிரதானமாக இருக்கிறது. 'பாப்' சங்கீத பாடல்களும் பிரசித்தமாக இருக்கின்றன.

இருந்தும் ஹைக்கூ வாழ்கிறது, தொடர்கிறது. சின்னதாக இருந்தாலும் அதிகம் சொல்ல முடியாவிட்டாலும் ஹைக்கூ எழுதிக்கொண்டு

தான் இருக்கிறார்கள். பிரபலமான செய்திப் பத்திரிகைகளும் ஹைக்கூ பிரசுரிக்கின்றன. ஹைக்கூ கவிஞர்கள் கைப்பட எழுதிய ஹைக்கூ சீட்டு பெருமையுடன் போற்றிக் காக்கப்படுகிறது. ஹைக்கூ சங்கத்தில் உங்கள் ஹைக்கூ தேர்ந்தெடுக்கப்பட்டால் அது பெரிய பாக்கியம்.

ஹைக்கூ வாழ்கிறது. காரணம் நம் எல்லோருக்கும் உள்ள அனுபவப் பங்கீட்டு இச்சை. கதை சொல்லும் இச்சை. ஹைக்கூ கதையைச் சுருக்கமாகச் சொல்லி நீ சொல்ல விரும்பியதை படிப்பவருக்குப் புரிய வைக்க வேண்டிய சவாலும் உள்ளது. ஹைக்கூ பிறருக்கு நாம் யார் என்று சொல்கிறது. நம் வாழ்வின் ஒரு சிறு பகுதியை அவர்களுக்குத் தந்து அதில் அவர்களும் பங்கு பெற கொஞ்சூண்டு இடம் தருகிறது.

ஹைக்கூ கவிஞர்கள் தம் கவிதைகளை மட்டும் இல்லாமல் மற்றவர்களின் ஹைக்கூவையும் படித்துக் காட்டி அனுபவ ஒற்றுமை ஏற்படுகிறதா என்று சோதித்தும் பார்ப்பார்கள். சில நூற்றாண்டுகளுக்கு முன் பாஷோ "உள்ளே செல்ல குறுகலான பாதைகள்" என்ற ஒரு நூல் எழுதினார். அவர் அதை எழுதச் சென்ற இடங்களுக்கெல்லாம் இன்றும் ஆயிரக்கணக்கான ஹைக்கூ கவிஞர்கள் சென்று அதே அனுபவம் அல்லது புது அனுபவம் ஏற்படுகிறதா என்று பார்க்கிறார் கள். ஆம், நீ சொன்னது போல் நானும் உணர்ந்தேன். இதுதான் ஹைக்கூ.

4. தமிழில் ஹைக்கூ

ஹைக்கூவின் இலக்கண சுத்தத்தை சற்றே மறந்துவிட்டால் ஹைக்கூ காட்சிகள் தமிழ் இலக்கியத்தில் பல இடங்களில் உள்ளன.

மூங்கில் இலை மேலே
தூங்கு பனி நீரே

என்கிற இரு வரிகளின் ஏகாரங்களை நீக்கிவிட்டால் ஹைக்கூ. நீங்கள் முன்பு இலையைப் பார்த்திருக்க வேண்டும். அதில் அபத்திர மாகத் தொங்கும் பனிநீர்ச் சொட்டும் தற்காலிக ப்ரகாசமும் ஒரு அற்ப ஆயுளைச் சிந்திக்க வைக்கிறது.

நாட்டுப்புறப் பாடல்களில் நேரடி அனுபவமும் மிகையின்றிச் சொல்வது இயல்பாக இருப்பதால் பல வரிகளில் ஹைக்கூவின் சாயல் இருப்பதைப் பார்க்கலாம்.

ஏட்டிலே எழுத்தாணி
நாட்டத் தெரியாது
எழுதிக் கொடுத்தாலும்
படிக்கத் தெரியாது

கடைசி இருவரிகள் நிச்சயம் ஹைக்கூ.

சின்னக்குட்டி நாத்தனா
சில்லறையை மாத்தினா
ராவெல்லாம் பேசினா
ரயிலுவண்டி ஏறினா

இது ஒரு முழு சிறுகதை. வரிக்கு வரி படிமம் மாறுகிறது ஆச்சரியம், நாத்தனார் எப்படி சின்னப் பெண்? சில்லறை எதற்கு? ராத்திரி என்ன பேசினாள்? ஏன் காலையில் ரயிலேறிப் போய் விட்டாள்? மறுபடி எப்ப வருவாள்? எத்தனை சிந்தனைகளை தருகிறது பாருங்கள்.

கள்ளுக்கடை அண்ணாச்சி
என் கணக்கு என்னாச்சு
வெள்ளிப்பணம் ஒண்ணாச்சு
விடியற்கால நேரமாச்சு.

பின்னிரண்டு வரிகளில் ஹைக்கூ சாயல்.

ராத்திரி பூரா குடிக்கிறான்
ஆரய்யா கடையிலே
ஏனப்பா பேசலை
போடப்பா ஒன்னரை
பூப்போட்ட கிளாசிலே

இது ஒரு முழு ஹைக்கூ, என்ன, எங்கே, எப்படி மூன்றும் ஒன்றிப் போய். 'பூப்போட்ட கிளாஸ்' கொஞ்சம் சில்லறை அதிகம் வைத்திருக் கிறார் போலும்.

கள்ளுக்குடிச்ச வெறியிலே
கண்ணு ரெண்டும் தெரியலே
நேத்து அடிச்ச ஜுரத்திலே
எப்படி ஏறுவேன் மரத்திலே

முதல் இரண்டு வரிகள் வேண்டும். மற்ற இருவரிகளை,

நேற்று பூரா ஜுரம்
காலை மரம் ஏற வேண்டும்

என்றால் ஹைக்கூ.

மஞ்சள் வெயில் காயுதாம்
மழையும் கொஞ்சம் பேயுதாம்
கொடி இடி வாத்தியம்
குழுகுழுன்னு முழங்குதாம்.

இதில்

மஞ்சள்வெயில்
மழை . . .
வாத்திய ஓசை

என்றால் ஹைக்கூ.

மேகந் திரள
மின்னிருட்டிக் கம்ம
தலை நனையுது

O

ஆனை நிற்க இடமின்றி
அலையுது ரோட்டு வழி.

இரண்டும் நேரான ஹைக்கூ. பின்னது இன்னும் சிந்தனை தருகிறது. யானை ரோட்டுக்கு வந்துவிட்டதில் காடுகளின் அழிவும், மழையின் மையும் புலப்படுகிறது. நாட்டுப்புறப் பாடல்களில் உள்ள நேர்மையும் எளிமையும் தமிழ் இலக்கியத்தில் சங்கப் பாடல்களிலும் உள்ளன.

அகம் புறம் என்ற பிரிவிலேயே இயற்கை சார்ந்த திணைகளிலும், உணர்ச்சி சார்ந்த துறைகளிலும் உள்ள நேர்மையும் அழகுணர்ச்சியும் ஹைக்கூவுக்கு பொது. ஆனால் சங்கப் பாடல்களில் மிகுதியான உவமைகளும் உருவகங்களும் ஹைக்கூவுக்குச் சரிப்பட்டு வராது. இருந்தும் குறுந்தொகை, புறநானூறு, நற்றிணை, அகநானூறு போன்ற நூல்களில் நிறைய ஹைக்கூ காட்சிகள் உள்ளன. நொடித்தண் விழுந்தண்டினார் இளைஞர்கள் குதிப்பதையும், அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில், என்னும் பாரி மகளிரின் பாடலையும் நிச்சயம் ஹைக்கூ என்பேன். பின்னதை ஹைக்கூவாக எழுதினால்,

போன மாதம் இந்த நிலாவில்
அப்பா இருந்தார் வீடும் இருந்தது

என்று சொல்லி முடித்துவிடலாம். மற்றவையெல்லாம் மறைமுகமாகச் சொல்லப்பட்டு விடுகிறது. இருந்தாலும் பாரி மகளிரின் பாடல் 'வென்றுஎரி முரசின் வேந்தர்' என்ற ஒரு பிரயோகத்தைத் தவிர மற்றதெல்லாம் ஹைக்கூ பாணிதான். அகநானூற்றில் ஒரு பாட்டில் ஒரு ஆச்சரியகரமான ஹைக்கூ ஒளிந்து கொண்டிருப்பதை இப்போது பார்க்கலாம்.

துறைமீன் வழங்கும் பெருநீர் பொய்கை
அறிமலர் ஆம்பல்மேய்ந்த நெறிமருப்பு
ஈந்தன் எருமைச் சுவல்ப முதுபோத்து
தூங்கு சேற்று அள்ளல் துஞ்சிப் பொழுதுபட
பைற்றிண வரால் குறையப் பெயர்தந்து
குருஉக்கொடி பகன்றை சூடி மூதூர்ப்
போர்ச்செறி மன்னரிற் புகுதரும் ஊரே . . .

ஓரம்போகியார் என்பவரின் பாடலில் (அகம் 316) முதல் பகுதி இது. குளத்தில் ஆம்பல் மலர்களை மேய்ந்த எருமை ராத்திரி எல்லாம் அந்தக் குளத்தில் அலைந்து திளைத்து காலை எழுந்து வருகையில் புஷ்டியான விரால் மீன்களை மிதித்து துவம்சம் பண்ணி குளத்தில் சண்டை போட்ட மல்லன் போல அதன் கொம்பில் பகன்றைக் கொடி சூடி வெளியே வருகிறது . . .

ரிச்சர்டு ரைட் என்பவர் எழுதிய ஹைக்கூவை மறுபடி பாருங்கள்.

காட்டிலிருந்து வரும்
மாட்டின் கொம்பில்
முல்லைக் கொடி !

அந்த மாடு காட்டிலிருந்து வருகிறது. இந்த எருமை பொய்கையிலிருந்து வெளிப்படுகிறது. அகநானூற்றுப் பாடலின் ஒரு சில வரிகளைத் தேர்ந்தெடுத்து,

துறை மீன் பொய்கை
ஆம்பல் மேய்ந்த எருமை
குருவுக் கொடி பகன்றை சூடிப்
புகுதரும்

என்ற ஒரு ரத்தினம் போன்ற ஹைக்கூவாக ஆக்க முடியும். ஆனால் இந்தப் பாடலின் பின் பகுதியையும் சேர்த்துப் படிப்பதில் அது உலக இலக்கிய அந்தஸ்து பெறுகிறது. தோழி தலைவனுக்கு உபதேசம் பண்ணும் பாட்டு இது. தலைவன் பரத்தையர்பால் சினேகம் வைத்திருக்கிறான் என்று சண்டை போடுகிறாயே கையில் குழந்தை வைத்திருக்கிறாய்; மேற்சொன்ன எருமைபோல் அலைந்து திரிந்துவிட்டு வருகிறான். அவன்பால் பல பெண்கள் நாட்டம். சண்டை போடாதே என்கிறாள். அந்தப் பின்பகுதியுடன் சேர்த்து வாசிக்கும்போது எருமை புதிய படிமம் பெறுகிறது. இரவு முழுவதும் பரத்தையர் சுகம் அந்தச் சேற்றுப் பொய்கைக்குள் கொம்பில் கொடிசிக்கி வெளிவரும் எருமை, ராத்திரி சுக அடையாளங்களுடன் கலைந்து வெளிவரும் தலைவனுக்கும் உவமையாகின்றன.

சிலப்பதிகாரத்தில் அங்கங்கே ஹைக்கூ சாயல்களைப் பார்க்க முடிவதற்குக் காரணம் இளங்கோவின் நேரடியாகக் கதை சொல்லும் திறமைதான்.

தளர்ந்த நடையில்
தண்டுகால் ஊன்றி
வளைந்த யக்கை
மறையோன்.

இதற்கு வியாக்கியானமே தேவையில்லை. கண்ணகி கதை தெரியா விட்டாலும் கீழ்வரும் வரிகள் ஹைக்கூ.

மெய்யிற் பொடி
விரிந்த கருங்குழல்
கையில் தனிச்சிலம்பு
கண்ணீர்.

இதில் 'விரிந்த' என்பதை யோசிக்கவும் 'விரித்த' இல்லை.

திருக்குறள் அனைத்துமே ஹைக்கூ என்று ஒரு புலவர் என்னிடம் சொன்னார். தப்பு. திருக்குறளின் குறிக்கோள் வேறு. அதற்கும் ஹைக்கூவுக்கும் பொது நோக்கு இருந்தால் அது சொற்செட்டு. இருந்தும் திருக்குறள் காட்சிகள் சிலவற்றில் ஹைக்கூ இருக்கிறது.

யான் நோக்கின்
நிலம் நோக்கும்

என்பதே நேரடி ஹைக்கூ. அதே போல்,

பீலிபெய்சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சாலமிகுந்தப் பெறின்.

என்பதை,

'மயிலிறகு வைத்ததில் வண்டி சரிகிறது' என்று மாற்றினால் ஹைக்கூ.

அதே போல்,

நெருநல் உளன்
இன்றில்லை

என்பது காட்சிகளாக விரிகிறது. பழமொழிகளில் பல வாழ்க்கை அனுபவத்தைச் சுருங்கச் சொல்வதால் பல வேளைகளில் ஹைக்கூ வடிவம் பெறுகின்றன. கீழ்வரும் பழமொழிகளை யோசித்துப் பாருங்கள்:

ஓணான்
வேலிக்கு இழுக்கிறது
தவளை
தண்ணீருக்கு இழுக்கிறது.

●

கள்ளுக்கு இரண்டு
கருவாட்டுக்கு இரண்டு

●

மண்ணைக்கீறி
மண்ணிலே
படுத்திருக்கிறார்கள்

●

சத்திரத்தில்
சாப்பாடு
மண்டபத்தில்
படுக்கை

●

தீப்பட்ட
வீட்டிலே
கரிக்கட்டை
நிறைய

●

நவாப் அத்தனை ஏழை
புலி
அத்தனை சாது

●

துப்பட்டியில் கிழித்த
கோவணம்

●

ஓடிப்போனது
பெரிய முயல்

●

செத்த இடம்
புல் முளைத்தது

●

மெய்யென்று இருந்தேன்
முழித்தேன்
கனவு

●

மாவும் போச்சு
மாவுகட்டின துணியும்
போச்சு.

●

முந்தானை இருக்கிறது.
நாலு வீடு இருக்கிறது.

(இவை எதற்கும் விளக்கம் தேவையில்லை.) நவீன தமிழ் இலக்கியத்தில் ஹைக்கூவின் பாதிப்பு இங்கிலீஷ் மொழிபெயர்ப்புகள் மூலம்தான் வந்திருக்க வேண்டும். முதலில் ப்ரெஞ்சு மொழியில் நூற்றாண்டின் ஆரம்பத்தில் (1905) ஹைக்கூ மொழிபெயர்ப்புகள் தோன்ற 1915ல் ப்ரெஞ்சு மொழியில் ஹைக்கூ கவிதைகள் எழுதத் தலைப்பட்டனர்.

திருவிழா முடிந்து
மரக்குதிரைகள்
அருகருகில்

என்கிற ப்ரெஞ்சு மொழி கவிதை (ரினெ மாப்ளான்) நிச்சயம் ஹைக்கூ மாதிரி சேம்பர் லெய்ன் என்பவர் 1880ல் பதிப்பித்த

புத்தகத்தின் மறுபதிப்பு 1910ல் இங்கிலீஷில் வந்தது. இதையெல்லாம் படித்து ஆங்கில கவிஞர்கள் ஹைக்கூ வடிவத்தை பரிசோதிக்கத் துவங்கினர். எஸ்ரா பவுண்டு, ஏப்ரல் 1917ல் *Poetry* இதழில் பதிப்பித்த 'மெட்ரோ (தரையடி ரயில்) நிலையத்தில்' என்கிற கவிதை ஹைக்கூ பாதிப்பில் எழுதியது. எஸ்ரா பவுண்டு அதை மூன்று முறை திருத்தினார். மூன்றாம் முறைதான் அது முழு ஹைக்கூ வடிவம் பெற்றது.

கூட்டத்தில் இந்த முகங்களின் தோற்றங்கள்;
ஈரமான கரிய கிளையில் மலரிதழ்கள்

முதல் முறை இரண்டு வரிகளையும் இணைத்து எழுதியிருந்தபோது இது ஹைக்கூவாக இல்லாமல் வெறும் உருவகமாகத்தான் இருந்தது. அந்த முகங்களை கரிய கிளையின் இதழ்களுக்கு ஒப்பிடுவது இரண்டு வரிகளையும் தனிப்படுத்தி, குறிமூலம் தனிப்படுத்தி எழுதியபோது தரையடி நிலையத்திலிருந்து வெளிப்பட்டு மலர்கள் நிறைந்த தரை மேல் உலகிற்குள் சேர்வதை உணர்த்துகிறதுபோல இந்த நிஜ ஹைக்கூ. அதன் பின் பலர் பவுண்டைத் தொடர்ந்து ஹைக்கூ எழுதினார்கள். வாலஸ் ஸ்டீவன்,

இருபது பனிநிறை மலைகளின் மத்தியில்
ஒரே ஒரு சலனம்
கருக்குருவியின் கண்

நீரில் மெல்ல இயங்குவது
இலையா பூச்சியா?

ஆங்கில இலக்கியத்தில் பாரதியார் காலத்திலிருந்தே ஹைக்கூவின் பாதிப்பு வந்துவிட்டதாலும் பாரதி படித்திருக்கிறார். பாரதியின் சில வரிகளில் குறிப்பாக வசன வரிகளில் ஹைக்கூ இருக்கிறது. ஹைக்கூவை 'ஹொக்கு' என்று குறிப்பிட்டு ஒரு கட்டுரை எழுதி யுள்ளார்.

சிறிய தானியம் போன்ற
மூக்கு

தீக்குள் விரலை வைத்தால்
நின்னைத் தீண்டும் இன்பம்

இருந்தும் அக்காலத்தில் முப்பதுகளில் நாற்பதுகளில்கூட ஹைக்கூவைப் பற்றி குறிப்பிட்டிருப்பது சாத்தியமே. சேலம் தமிழ்நாடன், புவியரசு சரியாக நினைவிலில்லை. அய்ம்பதுகளில் ஹைக்கூவைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கலாம். நவீன தமிழில் *வானம்பாடி* கவிஞர்கள் முதன் முதல் ஹைக்கூவைப்பற்றி குறிப்பிட்டிருப்பது சாத்தியமே. சேலம் தமிழ்நாடன், புவியரசு போன்றவருக்குப்பின் அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன் போன்றோரும் சிறு பத்திரிகைகளில் எழுதியிருக்

கிறார்கள். தமிழன்பன் *சூரியபிறைகள்* என்கிற கவிதைப் புத்தகத்துக்கு முன்னுரையில் ஹைக்கூவின் சரித்திரத்தைக் குறித்துக் கட்டுரை எழுதியுள்ளார். ஸ்ரீரங்கம் எஸ்.ஆர். என்ற பெயரில் நான் *கணையாழி* யில் ஒரு அறிமுகம் சிறிது தந்திருக்கிறேன். சி. மணி 'நடை' இதழில் ஒரு அறிமுகக் கட்டுரை எழுதியிருக்கிறார். அப்துல் ரகுமான் தன் வாணியம்பாடிக் கல்லூரி மாணவர்களுக்கு ஹைக்கூ எழுத பயிற்சி தந்திருக்கிறார். தமிழில் புதுக்கவிதையில் ஹைக்கூ முயற்சிகள் அதன் உண்மை உருவத்தை யாரும் தெளிவாக விளக்காததால் மூன்று அடிகளில் எழுதின பாட்டெல்லாம் ஹைக்கூ என்ற தப் பெண்ணம் வந்து குப்பைகள் மலிந்துவிட்டன. உருவகம் சமூகச் சாடல் இவையெல்லாம் ஹைக்கூ வேஷம் போட்டுக்கொண்டு சௌக்கியமான பாப் பொட்டலங்களாக நிறைய சத குப்பைகள் வந்துவிட்டதில் நிஜ ஹைக்கூ என்று தேர்ந்தெடுத்தால் மொத்தம் பத்துகூடத் தேறாது.

நவீன ஹைக்கூ தமிழுக்கு ஆங்கிலத்திலிருந்து மற்ற நாடுகளைப் போலவே வந்திருக்கிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஹெண்டர்சன் என்கிற அமெரிக்கரும், ப்ளைத் என்கிற ஆங்கிலேயரும் ஜப்பானில் தங்கினார்கள். ப்ளைத், ஜென் குருக்களிடம் பயின்றவர். அவர் ஜப்பானிய கலை இலக்கியங்களுக்கு ஆதார உந்துசக்தி, ஜென் பவுத்தம் என்று நம்பினார். இது பற்றி ஆங்கில புத்தகங்கள் எழுதினார். 1949–52 வரை நான்கு புத்தகங்களில் நூற்றுக்கணக்கான ஹைக்கூவை மொழி பெயர்த்து குறிப்புகளுடன் பதிப்பித்தார். அமெரிக்காவிலும் ஐரோப்பா விலும் இவை பரவி இளைஞர்களிடம் பிரபலமாயிற்று. Gary snyden என்பவர் எழுதிய ஹைக்கூ,

> **தண்ணீர் பக்கெட்டில்**
> **குப்புற மிதக்கும்**
> **செத்த எலி.**

அலன் கின்ஸ்பர்க் பீட், ஜெனரேஷன் துடிப்புத் தலைமுறை என்று அப்போது பேசப்பட்ட இளைஞர் இயக்கத்தின் முன்னணி கவிஞர்; ஹைக்கூ எழுதியுள்ளார்.

> **திரும்பிப் பார்த்தபோது**
> **என் முதுகெல்லாம்**
> **ஊதா மலர்கள்.**

> **மலர்களின்**
> **பெயர்கள் தெரியவில்லை**
> **தோட்டம் போச்சு.**

கின்ஸ்பர்க் 'ஹைக்கூ எழுதுவது எப்படி' என்று டயரி குறிப்பு வைத்திருக்கிறார்.

ஹைக்கூ மனசுக்கு வெளியே, புற உலகின் பிம்பங்களை எழுது, விளைவு அவைகளின் உறவுகளை உணர்தல். உறவுகளை எழுதாதே. பிம்பங்கள் மட்டும் போதும்.

ஜாக்கெரோவாக் என்னும் பிரசித்தமான இளைய சமுதாய நாவலாசிரியரும் அப்போது ஹைக்கூ எழுதினார்.

வீண் வீண்

பலத்த மழை
கடல்மேல்

மெக்ஸிகோ தேசத்து கவிஞர் அக்டேவியோ பாஸ் கூட ஹைக்கூ போல, கவிதை எழுதியிருக்கிறார்.

ஒவ்வொரு முறையும்
பம்பரம் விடும்போது
உலகின் மத்தியில் சுற்றுகிறது.

ஒரு சிறுவன் பம்பரம் விடும்போது அந்தக் கணத்தில் அது சுற்றும் இடம் தான் அவனுக்கு உலகிலேயே பிரதானமான இடம் என்கிற அழகான கருத்து; 'பாஸின்' கவிதை ஹைக்கூதான்.

தொடர்ந்து நூற்றுக்கணக்கான அமெரிக்கர்கள் ஹைக்கூ எழுதத் தலைப்பட்டனர். ஐ. நா. தலைவராக இருந்த டாக் ஹாமர்ஷீல்டு கூட ஹைக்கூ எழுதியிருக்கிறார். அதை W.H ஆடன் மொழி பெயர்த்துள்ளார்.

ரிச்சர்டு ரைட் என்னும் ஆப்பிரிக்க நாவலாசிரியர் சில பிரமிக்கத் தக்க ஹைக்கூவை 1960–ல் இறப்பதற்கு முன் எழுதியுள்ளார்.

காட்டிலிருந்து வரும்
மாட்டின் கொம்பில்
முல்லைக் கொடி

குடையின் துணியில்
வாசனை வெளிப்படும்
அளவான மழை.

முதல் ஹைக்கூவுக்கும் சற்றுமுன் அகநானூற்றில் மேற்கோளிட்ட பாட்டுக்கும் உள்ள ஒற்றுமை ஆச்சரியகரமானது.

5. ஹைக்கூ கலை

இதுவரை படித்து வந்திருப்பவர்களுக்கு ஹைக்கூவின் ஆதார அமைப்பு பற்றியும் அதன் உள்ளடக்கத்தைப் பற்றியும் சந்தேகம் இருக்காது என எண்ணுகிறேன். நேரடியாக அதன் விதிகளைச் சொல்லாவிட்டாலும், நூற்றுக்கணக்கான உதாரணங்களின் மூலம் அதன் ஆதார சங்கதிகளைப் படித்திருப்பீர்கள்.

தமிழில் ஹைக்கூவுக்கு வடிவம் அமைத்தால் எப்படி இருக்க வேண்டும்?

ஒரேயடியாக ஜப்பானிய 5, 7, 5 அசை வடிவத்தை ஆட்கொள்வதற்குத் தமிழில் முடியும். அந்த வடிவம் என்ன?

குடையின் துணியில்
வாசனை வெளிப்படும்
அளவான மழை

இந்த ஹைக்கூவைச் சற்றே திருத்தி,

குடையின் துணி
வாசனை வெளிப்படும்
அளவு மழை

என்றால் 5, 7, 5 நேரசைகளாக வருகிறது. இது தமிழின் பெருமை. ஆனால் இந்த விதியைக் கட்டாயமாக வைக்க வேண்டாம் என்று தோன்றுகிறது. இப்படி அசைகளில் அடக்கும்போது சற்று அழகு குறைந்து சில சமயம் செயற்கைத்தனம் வந்துவிடும் அபாயம் இருக்கிறது. எனவே தமிழில் ஹைக்கூ எழுத இந்த எண்ணிக்கை அவ்வளவு தீவிரமாகக் கடைபிடிக்க வேண்டாம். மூன்று வரிக்குள் சொல்லப் பாருங்கள். முக்கியமாக மொத்தக் கவிதையில் பாதியிலோ அல்லது இரண்டாவது வரியின் இறுதியிலோ ஒரு கருத்து தொடர்ந்தால் வடிவம் நிறைவாகிறது.

பனிநிறை மலைகளின்
நடுவில் ஒரே ஒரு சலனம்
கருங்குருவியின் கண்.

இதில் துல்லியமாக இரண்டு கருத்துகள் உள்ளன. முதல் இரண்டு வரிகள் பனி நிறைந்த அமைதியான மலைப்பாங்கான பின்புலக் காட்சியைச் சொல்வது. மூன்றாவது வரி அத்தனை பிரம்மாண்டமான பின்னணியில் ஒரு குருவி அதன் கண்களுக்கு அழைத்துச் செல்கிறது. (ஹைக்கூ கவிதையை Zoom Lens என்று சில வேளை சொல்வார்கள்.) இந்தப் பாட்டு வெறும் காட்சியுடன் நின்று விடுவதில்லை. கருங்குருவி யின் கண்கள் அசையும்போது அதன் இரைதேடும் இச்சை, உயிர் தேடும் இச்சை எல்லாம் வெளிப்படுகின்றன.

நம் அனுபவங்கள் நம் மனத்தில் பிம்பங்களாகப் பதிகின்றன. ஒரு காட்சியைப் பார்க்கும்போது ஒரு பொருளைத் தொடுகையில், ஒரு பறவை முகரும்போது, சுவைக்கும் போது எல்லாம் மனத்தில் பதிகின்றன.

தெளிவான எழுத்து, தெளிவான பிம்பங்களைத் தருகின்றது. எழுதியவன் காட்டும், உணர்த்தும், கேட்கும், தொடும் விஷயங்களை அவன் வார்த்தைகள் மூலம் படிப்பவன் பார்க்கிறான், உணர்கிறான், கேட்கிறான், தொடுகிறான். இவற்றின் விளைவாக எழுதியவன் மனத்தில் தோன்றிய எண்ணங்களையும் படிப்பவன் தனக்குள் ஏற்படுத்திக்கொள்ள முடிந்தால் எழுதியது நிறைவு பெறுகிறது. அதே எண்ணங்கள் கிடைப்பது அரிது. அதே போன்ற எண்ணங்கள் ஹைக்கூவில் மூன்று அம்சங்கள். 'என்ன, எப்போது, எங்கே' என்கிறார் கென்னத் யசுதா. என்ன என்பது கவிதையின் பிம்பம் முழுவதுமே அதிலேயே 'எப்போது' எங்கேயும் இருக்கும். உதாரணம்,

அதிகாலை நிலவு
அல்லி இலைகள்
அடிப்பாகம் காட்டும்
சட்டென்ற காற்றில்

கவிதையில் 'எப்போது' என்பது தெளிவாகவே உள்ளது. அதிகாலை, பின் நிலவுக்காலம் பௌர்ணமிக்குப் பிறகு. அல்லி இலைகள் என்றதால் குளம் அல்லது ஏரி அல்லது தேங்கின ஓடை இதெல்லாம் கவிதையின் எங்கே, எப்போது. இவை கவிதையில் ஓரிரு வார்த்தைகளில் பொதிந்திருக்க 'என்ன' என்பது கவிதை முழுவதும் வியாபித்துள்ளது. ஆரம்ப வரி சந்திரனின் வட்டம், அல்லி இலைகளின் வட்ட வடிவு மெல்லிய இருட்டு இல்லை. சூரியன் எழவில்லை. அல்லி இலைகள்கூட லேசாகத்தான் தெரிகின்றன. ஆனால் சட்டென்று காற்றடிக்க ஒரு வினோதமான காட்சி. இலைகளின் வெண்மையான அடிப்பாகங்கள் தெரிவிக்கின்றன. எதிர்பாராத காட்சி அதிகாலையின் சந்திரன் போல் கடைசி வரியில். இந்த தரிசனத்தின் காரணம். சட்டென்று காற்று ... இந்த ஏறக்குறைய காலை தடாக சூழ்நிலையில் சட்டென்று காற்றில் அதன் 'சிக்' கலை நம்மால் உணர முடிகிறது. என்ன, எங்கே, எப்போது முற்றும் எவ்வளவு சௌகரியமாகப் பொதிந்து ஒரு சிறு வைரம் போலக் கவிதை உருவாகியுள்ளது.

இந்தப் பாடலில் மற்றொரு ஹைக்கூ சித்தாந்தம் தெளிவாகிறது. ராபர்ட் ஸ்பென்ஸ் என்பவர் சொல்லும் Multiple Sense Imaginary இந்தக் கவிதையில் பார்த்தல், உணர்தல் போன்ற எல்லாமே இருப்பதை யோசிக்கலாம். நிலாவையும் மலரையும் நம்மால் பார்க்க முடிகிறது. "உஷ்" என்ற எதிர்பாரா காற்றைக் கேட்கமுடிகிறது. அதன் சில்லென்ற வீச்சை நம் சருமத்தில் உணரவும் முடிகிறது. கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் குளக்கரையின் ஈர வாசனையைக்கூட . . .

ஹைக்கூவின் பாஷையில் மந்திரம் சொற்பம், மிகை தவிர்த்தல்.

அனாவசிய வார்த்தைகளைச் சீவிப் போடுதல் இந்தச் சுருக்கத்துக் காகத் தேவைகளையும் விட்டு விடலாம். தந்தி பாஷைக்குக் கூடப் பயன்படுத்தலாம்.

சேர்த்து விட்டால் போதும்.

ஹைக்கூ ஒரு காட்சியைக் காட்டுகிறது. அதைப் பற்றிச் சொல்வ தில்லை. அதன் விளைவான உணர்ச்சிகளையும் சொல்வதில்லை. இறந்த பூனையைப் பார்த்து வருத்தப்பட்டேன் என்பது ஹைக்கூ இல்லை. ஆனால்,

கொட்டும் மழைக்கு
வாயைத் திறந்து
இறந்த பூனை

இது ஹைக்கூ (மைக்கல் மக்லின்டால்.)

அறுவடை நிலா
புகை தவழும்
நதிப் பரப்பு

இது ஹைக்கூ (ஹட்டோரி ரன்ஸட்ஸு.)

அறுவடைக் காலத்து நிலவின் ஒளிபட்டு நதியின் மேல்பரப்பில் தவழ்ந்து செல்லும் புகை தெரிகிறது. இந்த ஹைக்கூ இலக்கண சுத்தமாக, வியாக்கியானமாக எழுதத் தேவையில்லை. அதற்காகப் புதுப் பாட்டாகச் சுருக்கக் கூடாது. தெளிவான ஓர் ஆதார அமைப்பு இருக்க வேண்டும். மிகச் சில வேளைகளில ஹைக்கூ பழைய இலக்கியத்தின், புராணத்தின் சம்பவங்களைச் சுட்டிக் காட்டலாம்.

வானத்தில் ஆதியாகம
நீலம் – மனைவியிடமிருந்து
ஆப்பிள்

ஆதாம் ஏவாளின் ஜெனிஸிஸ் கதைக்குச் செல்கிறது. ஆப்பிள் பழம் அந்த நாட்களையும் நிகழ் காலத்தையும் இணைத்து மனைவியிட மிருந்து ஆப்பிள் வாங்கிக் கடித்து இவன் விழப் போகிறான் என்பதைக் காட்டுகிறது. இம்மாதிரியாக இலக்கிய புராணச் சுட்டிக் காட்டுதல்கள் ஹைக்கூவில் மிகக் குறைவே.

அதே போல் உவமையும் உருவகமும் பழைய ஹைக்கூக்களில் சுத்தமாகக் கிடைக்கிறது. நவீன ஹைக்கூக்களில் அவ்வப்போது பயன்படுத்தத் துவங்கியுள்ளார்கள்.

தோஸோவா காலையோ (1902–62)

குளிர்கால வானம்
மலரிதழ்போல்
நாக்கு.

நாக்கை மலரிதழுக்கு உவமை சொல்ல குளிர் காலத்தில் அந்த நாக்கை எப்படி கவிஞனால் பார்க்க முடிகிறது. உறைபனி பெய்வதை இளைஞர்கள் நாக்கை நீட்டிச் சுவைப்பார்களாம்!

உருவகங்களும் அவ்வப்பொழுது வருகின்றன. தோஸோவாவின் (நதியின் பற்கள்) பக்கம் உதாரணம்.

சில சமயம் உருவக மாற்றமும் வருவதுண்டு.

அலைகளும்
காற்று வாசனையும்
சேர்ந்து மோதுகின்றன

அலைகள் மோதுவதும் காற்று வாசனை ‘மோது’வதும் வேறு வேறு உணர்ச்சிகள். Pathetic fallacy வஸ்துக்களுக்கும் ஜந்துக்களுக்கும் மனித குணங்களை தருவதும் ஹைக்கூவில் உண்டு.

தரையில் கை வைத்து
பாடல் சமர்ப்பிக்கும்
தவளை!

பாடுவதும் கை வைப்பதும் மனித குணங்கள்.

அனமட்டோபாப்பியா என்கிற அணி வார்த்தைகளின் சப்தங்களில் சொல்லப்படும் விஷயம் இருப்பது சப்தங்களில் ‘க்றீச்’ என்று பற்ற வைத்தல் ‘சர்ர்’ என்று வழுக்குவது இதெல்லாம் அனமட்டோபாப்பியா. இதுபோல ஜப்பானிய மொழியில் பல ஓசை வார்த்தைகள் உண்டு.

‘யுராரி யுராரி’–**நெளிந்து நெளிந்து**

‘ஒச்சி கோச்சி’ – **இங்கும் அங்கும்**

இவற்றையும் பயன்படுத்துகிறார்கள்.

எதுகை மோனையும் உண்டு. குறிப்பாக மோனை

உ–ம்.

அஸாமி
அஸயாகாநா
அஸாநோ
அமே அகாரி.

கொஞ்சம் சுதந்திரம் எடுத்துக்கொண்டு

அடை மழைக்குப்பின்
அதிகாலை
அழகான
அல்லித்தண்டு.

என்று மொழிபெயர்க்கலாம்.

ஹைக்கூ ஜப்பானிய மொழியில் எழுதப்படும்போது இம்மாதிரி மூன்று வரிகளில் எழுதப்படுவதில்லை. பெரும்பாலும் ஒற்றைத் தூண் போல அல்லது இரட்டைத் தோரணம் போலத்தான் எழுதப்படு கின்றன. தமிழில் அவ்வாறு எழுத சரிப்பட்டு வராது. அதனால் மேற்கத்திய 'மூன்று வரி' மடக்கல் செளகரியமாகும். இருந்தும் சில நவீன கவிஞர்கள் ஆங்கிலத்திலும் ஹைக்கூ எழுதுகையில் சித்திர வடிவத்தை முயன்று பார்த்திருக்கிறார்கள். இஇ கம்மிங்ஸ், தன் சில கவிதைகளை இப்படி எழுதியிருக்கிறார்,

கடும் வெயிலில்
இன்னும் ஆடும்
காலி ஊஞ்சல்

என்பதை,

கடும் வெயிலில்
          இன்னும் ஆடும்
                    காலி ஊஞ்சல்

என்று ஊஞ்சல் போலவே எழுதும் வழக்கமும் உண்டு.

இவ்வாறு பலர் வடிவ வேற்றுமைகளைச் செய்தாலும் இந்தக் கோணல் வரியெல்லாம் ஹைக்கூவுக்குத் தேவையில்லை எனப்படுகிறது.

ஆனால் ஹைக்கூ எழுதுவதற்கு முன் திரும்பத் திரும்ப அதைப் படித்துத் திருத்துவதை அனைவரும் செய்கிறார்கள். சிலர் பல வருஷங்கள் கழித்துக்கூட திருத்துகிறார்கள். சிலர் மற்றவரின் ஹைக் கூவைத் திருத்தி எழுதுகிறார்கள்.

காலி லிஃப்ட
திறக்கிறது
மூடுகிறது.

ஜாக்கெய்ன் (Jack Cain) என்கிறவர் எழுதிய இந்த ஹைக்கூ 1969–இல் ஒரு பத்திரிகையில் வெளிவர, இதை ஃப்ராங் ராபின்சன் (Frank Robinson) என்கிறவர் விஸ்தரித்து உருவகம் ஒன்றைச் சேர்த்தார்.

காலி லிஃப்ட்
திறக்கிறது
காலி முகமூடிகள்
மூடுகிறது.

என்னும்போது பரிமாணமே மாறுகிறது. முதல் ஹைக்கூவில் லிஃப்ட் மேலும் கீழும் மிஷின்தனமாக ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறது. அதில் செல்ல யாருமின்றி ஓர் இயந்திரத்தின் முட்டாள்தனத்தைக் குறிக்கிறது. கொஞ்சம் இரவின் தனிமை. அலுவலக விடுமுறை என்று பல குறியீடுகளும் உள்ளன.

இரண்டாவது ஹைக்கூவில், லிப்டில் மனிதர்கள் இருக்கிறார்கள். ‘காலித்தன்மை’ அவர்களுக்கு மாறிவிடுகிறது; ஆனால் அவர்கள் முகங்கள்தான் வெற்று முகங்கள்.

கவிதையின் அழுத்தம் மாறுகிறது.

எஸ்ரா பவுண்டு தரையடி ரயில் நிலையத்தைப் பற்றிய கவிதையை முன்பு ஒரு பக்கத்தில் குறிப்பிட்டோம்.

ஹைக்கூ கலையின் முக்கிய நோக்கம் இதுதான்.

தெளிவான மொழியில், வாசகனுடன் பங்கிடுவதற்குத் தடையாக இருக்கும் வார்த்தைகள் ஏதும் இல்லாது, நேரடியான சிக்கனமான கவிதை.

இந்த நேரடித் தன்மையில் அதிகம் வலியுறுத்தல் இருப்பதால் உருவகக் கவிதைகளைப் பெரும்பாலும் ஹைக்கூவில் தவிர்க்கிறார்கள்.

6. ஹைக்கூ எழுதுவோம் – பழகிடுவோம்

ஹைக்கூ ஒன்றும் பெரிய செப்பிடு வித்தை இல்லை. இதுவரை படித்ததை வைத்துக்கொண்டே உங்கள் மனத்தில் பல ஹைக்கூக்கள் தோன்றும். உங்களுக்குத் தோன்றும் ஹைக்கூவை எழுதுவதற்கு முன் சில யோசனைகள்:

1. நேரடி அனுபவம் நீங்கள் பார்த்து உணர்ந்ததை எழுதுங்கள்.

2. அதை அலங்காரமில்லாமல் நேரடியாக அப்படியே கடத்தும் நோக்கத்துடன் எழுதிப் பாருங்கள்.

3. மூன்று வரிகளுக்குள் முடிக்கப் பாருங்கள்.

4. முதல் இரண்டு வரிகளில் ஒரு கருத்தும் அடுத்த வரியில் தொடர் கருத்தும் அமைக்க முடிகிறதா பாருங்கள்.

கண்டிப்பாக அனுமதி இல்லை என்ற போர்டு.

– இது ஒரு கருத்து, இதன் தொடராக எதை அமைப்பீர்கள்.

புழுதி மட்டும் உள்ளே செல்கிறது.

– இது தொடர் கருத்து. இதுவே விக்ரமாதித்தன் கதையில் இன்னும் சிறப்பாக வருகிறது பாருங்கள்.

5. அந்த மாதிரி போர்டு நீங்கள் பார்த்து உள்ளே செல்வது புழுதியாக இல்லாமல், பூக்களாக இருக்கலாம். காற்றாக இருக்கலாம். அல்லது குட்டி நாயாக இருக்கலாம். நீங்கள் எதைப் பார்த்தீர்களோ அதை எழுதுங்கள்.

6. வெறும் வார்த்தைச் சித்திரம் மட்டும் இல்லாமல் அதன் பின்னணியில் சிந்தனைகள், அர்த்தங்கள் இருந்தால் சிறப்பு. சென்ற கவிதையில், இயற்கை மனித நியதிகளுக்குக் கட்டுப்படுவதில்லை என்கிற கருத்து முதலில் தோன்றுகிறது. கண்டிப்பாக அனுமதி இல்லை என்று விடுதியா, ஆப்பரேஷன் தியேட்டரா (விக்ரமாதித்தன் கவிதையில் நல்லதும் கெட்டதும்) எத்தனை தடைகளை நீங்கள் தினசரி சந்தித்திருப்பீர்கள். எத்தனை அனுமதிகள் உங்களுக்கு மறுக்கப்படுகின்றன. அவற்றில் எத்தனை மென்மையான மீறல்கள் ...

இவையனைத்தும் கவிதையில் கிளைத்தெழும் கருத்துக்கள்.

7. எழுதுங்கள் பென்சிலில்.

8. திரும்பப் படித்து, முன்பு எழுதினதில் பாதி அளவில் அதே கருத்து சொல்ல முடியுமா பாருங்கள். முடிந்தால் அழித்து எழுதுங்கள்.

9. அதன்பின் படித்துக் காட்டுங்கள். மனைவியிடம், மகளிடம், தங்கையிடம், நண்பனிடம் யாரிடமாவது. Nothing Secret.

10. வியாக்கியானம் ஏதும் இன்றி அவர்கள் கவிதையைப் பற்றி என்ன சொல்கிறார்கள் எனப் பாருங்கள். அவர்களுக்கு வேறுவித சலனம் ஏற்படலாம். அல்லது அவர்கள் பாதிக்கப்படாமல், இதில் என்ன இருக்கு, போர்டு போட்டிருக்கு. நாம் நுழையறது நாய்க்குத் தெரியுமா என்ன? இது என்ன பொயட்ரி! என்றும் கேட்கலாம்.

இவ்வாறு குறிப்பிட்ட ஹைக்கூக்களில் சிறந்த ஒன்றைத் தேர்ந் தெடுத்து ஒரு ரப்பர் ஸ்டாம்ப் செய்துகொண்டு நண்பர்களுக்குக் கடிதம் எழுதும்போது பயன்படுத்துங்கள். அல்லது கைப்பட எழுதுங்கள். (விருப்பமிருந்தால் எனக்கும் எழுதலாம்.)

ஜப்பானில் இன்றைய நாட்களில் அழகழகான பொருட்களின் மேல் எல்லாம் ஹைக்கூ பதிக்கிறார்கள். அழகான சித்திர எழுத்துக் களில் அட்டைகளிலும் பெட்டிகளிலும் அச்சிடுகிறார்கள். கல்லூரி, பள்ளி நோட்டீஸ் போர்டுகளில் ஹைக்கூ எழுதுகிறார்கள்.

நேற்று என்
பேனாவையும் மீனாவையும்
காணோம்.

என்று ஒருமுறை சென்னைக் கல்லூரி ஒன்றில் பார்த்தேன், ஏறக் குறைய ஹைக்கூ 'என்' இல்லாமலிருந்தால்.

தமிழில் வரும் சிறு பத்திரிகைகள் இன்னும் ஹைக்கூவைத் தனியாக அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அவ்வப்போது ஏதாவது ஒரு மூலையில் சிறிய கவிதைகளாகப் பிரசுரிக்கிறார்கள். தனிப்பட்டு ஹைக்கூ பக்கங்களை அவர்கள் தர வேண்டும். ஹைக் கூவுக்கென்றே ஓர் ஒல்லியான சிறு பத்திரிகை யாராவது ஆரம்பித்தால் ஆயுள் சந்தா அனுப்புவேன். ஆனால் ஹைக்கூவை அடையாளம் கண்டு கொள்வதில் ஆரம்ப சிரமம் இருக்கலாம். பரவாயில்லை. Benefit of doubt என்கிறார்களே, அதன்படி பிரசுரிக்கலாம்.

மலையில் தோட்டத்தில்
பறவைகள் சப்தம்

என்பது நிச்சயம் ஹைக்கூ அல்ல. ஆனால்,

மலையில் தோட்டத்தில்
குழாயில் வென்னீர்

என்பது ஹைக்கூ. எப்படி என்று இப்போது உங்களால் நிச்சயம் சொல்ல இயலும்.

நீங்களே உங்கள் ஹைக்கூக்களைத் தொகுப்பாகச் சொந்தக் காசைச் செலவழித்துப் பதிப்பதாக இருந்தால் அழகாகப் பதிப்பிக்க வேண்டும். ஹைக்கூவுக்கு முக்கியம் இந்த அழகுணர்ச்சி. எளிய சித்திரங்கள் தெளிவான எழுத்துகள் நிறைய இடைவெளி . . . இப்படி.

கவிதைகளை மக்கள் மத்தியில் படித்துக் காட்டுவது அமெரிக்காவில் ஒரு நல்ல பழக்கம். நூலகங்களில் இதை அமைக்கலாம். உங்கள் கவிதைகளை சில சமயம் நீங்களே படித்துக் காட்டும்போது பழக்க மில்லாததால் தடுமாறலாம். தெளிவாகப் படிக்கக் கூடிய நண்பரிடம் கேட்டுக் கொள்வது நல்லது. எத்தனையோ ரசிகர் சங்கம் இருக்கையில் ஏன் ஹைக்கூ சங்கம் ஒன்றை உங்கள் ஊரில் அமைக்கக் கூடாது?

நீ ஒரு ஹைக்கூ
அனுப்பு பதிலுக்கு
நான் ஒரு . . .

உருவகம் எத்தனை பொருத்தமாக இருப்பினும் ஒருகணம் நம் கவனத்தைக் கலைக்கிறது. மதிமுகம் என்பது உருவகம். முகத்தைப் பற்றி நினைக்க விடாமல் சந்திரனுக்கு அழைக்கிறது.

ஹைக்கூ நேரடியானது. ஒன்றிய, கூர்ந்த சுட்டிக் காட்டுதல். அலங்காரங்களோ உவமைகளோ ஏதும் தேவையின்றிச் சொட்டேர் என்று ஒரு நெத்தியடி! ஒஸாகி ஹொஸாய் (1886–1926)

அட்டைப் பெட்டியில்
ஒவ்வொரு ஆணியும்
வளைந்திருக்கிறது

என்று ஒரு ஹைக்கூ. நேரடி ஒரு துப்பாக்கிக் குண்டு போல பாயும் இது. கவிதை எதற்காக அட்டைப் பெட்டியில் சேகரம்? என்ன முயன்று பார்த்தும் அத்தனையும் வளைந்து போச்சு? தாத்தா படமா, சுத்தியல் இல்லையா? அடித்தது யார்? அப்பாவா? அவர் கட்டை விரல் என்ன ஆச்சு? இது ஒரு லெவல் . . . படிமம். அதன் பின்னணியில் விடாமுயற்சி. பிடிவாதம், தோல்வி, அதே சமயம் காலில் குத்தாமல் பெட்டியில் சேகரித்து வைக்கும் ஜாக்கிரதை.

மூன்று வரி!

அதேபோல் இஷிகாவா தாகு போகு என்பவர்.

நிலைக் கண்ணாடிக் கடையில்
அதிர்ச்சி.
நான் தெருப்பொறுக்கி போல.

ஹைக்கூ எழுதும் மனசு ஒரு நளின மனது. ஜப்பானில் சின்னப் பெண்கள் சட்டென்று ஹைக்கூ போல எழுதி விடுகிறார்கள்.

அப்பா ஆபீஸ் போகிறார்.
டாட்டா காட்டினேன்; அப்பா கையை ஆட்டினார்.

தங்கச்சி டாட்டா காட்டினாள்; அப்பா கையை
ஆட்டினார்
அம்மா டாட்டா காட்டினாள்; அப்பா கையை
ஆட்டவில்லை.

ஏன் ?

ஆறு வயது சாமிகோ யாஷிகோவின் இக்கவிதையில் மெல்லிய சோகம் உள்ளது.

ஹைக்கூவுக்கு விஸ்தாரமான வியாக்கியானம் தேவையில்லை. நேரடியாகப் புரியவில்லையென்றால் விட்டுவிடுங்கள். அது உங்கள் ஹைக்கூ அல்ல. சென்றியு என்று மற்றொரு வடிவம் உள்ளது. ஹைக்கூ போலத்தான். சற்றே நகைச்சுவை மிளிரும். இவ்விரண்டு வடிவங்களுமே பாசாங்கில்லாத, உருவகம், உவமையில்லாத நேரடிக் கவிதைகள். வருணனை சுட்டுப் போட்டாலும் கிடையாது. பிலாசபி, போதனை எல்லாம் இல்லை. ஒரு படிமம் அல்லது ஒன்றுடன் ஒன்று உதவும் இரண்டு படிமங்கள். அத்தனைதான். அதிலிருந்து கிளைத்து எழும் எண்ணங்கள் வாசகன்பாடு.

பள்ளிகளில் துணைப் பாடமாக தமிழாசிரியர்கள் ஹைக்கூ சொல்லித் தர முயன்றால் பிள்ளைகளிடமிருந்து சில ஆச்சரியகரமான வரிகள் வரலாம். முதலில் சும்மா இருபது முப்பது ஹைக்கூ கவிதை களைப் படித்துக் காட்டுங்கள். இந்தப் புத்தகத்தில் உள்ளத்திலிருந்தே தேர்ந்தெடுக்கலாம். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் சற்றே நிறுத்திப் பிள்ளைகள் எவ்வாறு அதைக் கிரகிக்கிறார்கள் என்று பாருங்கள். சிலர் சிரிக்கலாம். சிலர் விழிக்கலாம். கீழ்வரும் ஹைக்கூவை போன ஸாகக் கொடுக்கிறேன்.

பார்பர் ஷாப்பில்
பெருக்கும்போது
நிறையத் தலைமயிர்.

●

அலைகளிலிருந்து உருண்டுவரும்
காலி சக்கர நாற்காலி

●

சுவர்க்கோழி
இடி

இதன் பின் குழந்தைகளையே ஏதாவது இடத்தின் பெயர் சொல்லச் சொல்லுங்கள். அண்ணா சமாதி, காந்தி நகர், காமராஜ் சாலை இவைகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதி அவைகளுக்குள் ஏதாவது ஒற்றுமை உள்ளதா என கேட்டுப் பார்க்கலாம்.

அண்ணா சமாதி
காந்தி நகர்
காமராஜ் சாலை.

எல்லாமே தேசத்தலைவர்கள் என்று எந்தப் பிள்ளையும் சொல்லும். மேல் கேட்டுப் பார்த்தால் சமாதி, நகர், சாலை இவைகளுக்குள் இருக்கும் சம்பந்தத்தைச் சொல்ல முடியும். நகரில் சாலை வழியாக சமாதிக்குச் செல்லலாம். அல்லது சாலையில் நகர்ப் போக்குவரத்தில் சாலை விபத்தினால் சமாதி செல்லலாம் . . . இவ்வாறு எண்ணத் தொடர்ச்சியை பிள்ளைகளிடையே விஸ்தரித்துப் பழக்குங்கள்.

அதன் பின் பிள்ளைகளை இரண்டு வரிசையாய்ப் பிரித்து ஒரு அணியை இடது பக்கத்தில் ஏதாவது வாக்கியங்கள் ஆளுக்கொரு வாக்கியம் என்று எழுதச் சொல்லிப்பாருங்கள். வெறும் சொற்கள் அல்ல, வாக்கியங்கள் – நிகழ் காலத்தில்,

நாய்குரைக்கிறது
பள்ளி மணி அடிக்கிறது
அப்பா ஊருக்குப் போகிறார்.
குட்டிக் கரணம் போடுகிறேன்
பஜ்ஜி சாப்பிடுகிறேன்
ரேடியோ கேட்கிறேன்.

மழை பெய்கிறது.
காற்று அடிக்கிறது.
ரயில் புறப்படுகிறது.

கார் ஓடுகிறது.
தூக்கம் வருகிறது.
ரோஜா பறிக்கிறேன்.

அதன் எதிரே அடுத்த அணியை வேறு ஏதாவது வாக்கியம் . . . சுதந்திரமான வாக்கியம் எழுதச் சொல்லுங்கள். சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்றுகூட கட்டாயமில்லை.

இந்த இரண்டையும் பொருத்திப் பார்க்கையில்,

அப்பா ஊருக்குப் போகிறார்
ரேடியோ கேட்கிறேன்.

●

ரயில் புறப்படுகிறது
ரோஜா பறிக்கிறேன்.

இரண்டிலும் ஹைக்கூ சாயல் இருப்பதை நீங்கள் உணர்ந்து சுட்டிக் காட்டலாம். அப்பா எதற்கு ஊருக்குப் போகிறார். அவர் ரேடியோ

கேட்க வேண்டாம் எனத்தடை செய்திருக்கிறார். அதனால் அவர் போனவுடன் ரேடியோ போட்டுக் கேட்கிறேன் என்று அர்த்த விஸ்தாரம் கிடைக்கிறது.

அதுபோல் ரயில் புறப்பட அவசரமாக யாருக்கோ விடை கொடுக்க ரயில் நிலையத்தில் உள்ள ரோஜாவைப் பறித்து ரயிலுடன் ஓடி கொடுக்க முயற்சி செய்கிறேன்.

இவ்வாறு இரண்டு நேரான படிமங்கள் ஒன்றுடன் ஒன்று தொட்டுக் கொள்ளும்போது ஹைக்கூ அனுபவம் பிறப்பதைச் சுட்டிக் காட்டலாம்.

பிள்ளைகளுக்கு ஹைக்கூ அனுபவம் எளிதில் வரும் என்று நினைக்கிறேன். இவ்வாறு நேரடியான அனுபவங்களை அவர்களை விட்டே சொல்லச் சொல்லும்போது மறைவில் அவர்களின் எழுத்தாற்றல் வளர்கிறது. அழகுணர்ச்சி அதிகரிக்கிறது.

கவிதையின் நுட்பங்களை அவர்கள் சுலபத்தில் கற்றுக் கொள்ள இயலும். அகநானூற்றின் அந்த அருமையை ஒரு ஹைக்கூவின் மூலம் எவ்வளவு எளிதாகக் கற்றுத்தர முடியும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

7. ஹைக்கூ அல்லாத மற்ற வடிவங்கள்

தன்கா என்கிற வடிவத்தைப் பற்றி முன் ஒரு அத்தியாயத்தில் சொன்னோம். தன்கா கவிதைகளை இணைத்து ரெங்கா என்ற வடிவத்தைப் பற்றியும் சுருக்கமாகச் சொன்னோம். அதை இந்த அத்தியாயத்தில் சற்று விவரமாகப் பார்க்கலாம்.

ரெங்கா என்பது இருவர், இருவருக்கு மேற்பட்டவர் கூட்டு முயற்சியாக, சங்கிலியாக கேள்வி–பதில் போல் நீண்ட கவிதை. அதன் ஆரம்பக் கவிதையாகப் பிறந்த ஹைக்கூ தனியாட்சிப் பெற்று பிரிந்து போனது பற்றி முன்பே சொன்னோம்.

ரெங்கா தொடர் கவிதை ஜப்பானில் மெல்ல அருகிக் கொண்டே வர இந்த நூற்றாண்டின் 60களில் மேற்கத்திய ஹைக்கூ பத்திரிகைகளில் புத்துயிர் பெற்றது. இந்தத் தொடர் கவிதை நம் இந்திய மொழிகள் பலவற்றில் உண்டு. பழங்கால அந்தாதியிலிருந்து இக்காலத்தில் குறிப்பாக நாட்டுப்புறப் பாடலில் லாவணி பாடுபவர்கள், எரிந்த கட்சி எரியாத கட்சி பாடுபவர்கள், பாட்டுக்குப் பாட்டெடுத்துப் பாடுபவர்கள் எல்லாம் ரெங்கா வகைதான். வடக்கத்திய கவ்வாலியி லும் இந்தப் பழக்கம் உள்ளது. ஜப்பானிய ரெங்காவுக்கும் இவ்வகை தொடர் பாட்டுகளுக்கும் உள்ள வித்தியாசம் ஒருவருக்குப் பின் ஒருவர் என்று பலர் அமைப்பது. முன்பே தயாரில்லாமல் அவரவர் அமைக்கும் வரிகள் சிறியவை. குறைவானவை, லாவணி, கவ்வாலி யெல்லாம் தனித்தனியே மிக நீண்டவை.

தமிழக நாட்டுப்புறப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், திருமணப் பாடல்கள் சில ரெங்கா வடிவுள்ளவை.

அண்மையில் ஹைக்கூக்களை இணைத்து ரெங்கா வடிவில் மேற்கத்திய பத்திரிகைகளில் செய்து வருகிறார்கள். முதல் ஹைக்கூவுக்கும் அடுத்ததற்கும் சம்பந்தம் வேண்டும். அது வெளிப்படையாக இருக்க வேண்டும் எனக் கட்டாயமில்லை.

1980ஆம் ஆண்டு டோக்கியோவில் இரு அமெரிக்கர்கள், ஒரு ஜப்பானியர், ஒரு ஆங்கிலேயர், ஒரு வெல்ஷ் நாட்டவர் ஒத்துழைத்து மாற்றி, மாற்றி அமைத்த ரெங்கா தொகுப்பின் மொழி பெயர்ப்பு இதோ:

காலைக்காற்று
மழை மேகம் விலக
ஆடும் மலர் மொட்டுகள்.

◆

பள்ளிப் பிள்ளைகள்
டூரிஸ்ட் பஸ்ஸில்.

◆

பிடித்தும் பிடிக்காமலும்
மூன்று பிள்ளைகளும்
ஒரு வாத்தும்.

◆

நிழல்கள் கருக
கிழவன் கதவைப்பூட்டுகிறான்.

◆

காகங்கள் கிளைகளில்
ஒன்று சேர
வானம் இருள்கிறது.

◆

குளிரிலிருந்து உள்ளே வந்து
பாட்டு சாதகம்.

◆

சமையல்காரன் சன்னலைத் திறந்து
பனியைப் பார்க்கிறான்.

◆

பூனைப் பாதங்கள்
சந்தின் குறுக்கே.

◆

நைட்கிளப் மூட
விடியலில்
கண் சிமிட்டும் நியான்.

◆

டிபன் பாக்ஸை மறக்காதீங்க.
வெள்ளை ஊறுகாய்
அப்புறம் ஒரு ஆச்சரியம்.

◆

ஸ்டேஷனுக்கு சைக்கிளில்
அஞ்சு நிமிஷம்

◆

தினம் தினம் வாசல் பெருக்கும்
கிழவியைக் காணோம்.

◆

மலர் இதழ்கள்
மாத்திரைப் பட்டைகள்.

◆

கண்ணாடியில் மஞ்சு
வென்னீர் ஆறுகையில்
முகப்பரு ஆராய்ச்சி.

◆

இறுக்கமான ஜீன்ஸ்
பரிவாகத் தேர்ந்தெடுத்தது.

◆

டிஸ்கோ அலறல்
நகரத்தில் நடனமிடும்
காரே மூரே இளைஞன்.

◆

சின்ன வகுப்பு பாட்டின் நடுவில்
சின்னப் பெண் அழுகை.

◆

தொப்பி
விட்டுப்போன மூன்று கையுறை.

◆

உடைந்த கோப்பை
சூடான டீ இனிப்பு
சன்னலைத் தட்டும் ஈசல்.

◆

நெளிந்து நிமிர்ந்து
வால் துடிக்க
அறையை விட்டுப் போகிறது.

◆

பதின்மூன்றாம் நிலவு
அவள் வீட்டின் மேல்

◆

அம்மாவும் பெண்ணும்
புறாக்களைப் பிரிக்கிறார்கள்
கோவிலை விடுகையில்.

◆

மஞ்சளான போட்டோ நிழற்படம்.

◆

ஒழுகும் கூரையில்
நீரின் அளவில்
ராத்திரி அளவு.

◆

படுப்பது வெயிலில்
தரையில்.

◆

உன் கை ஊஞ்சலில்
என் தலை
தூக்கத்தில் நழுவ.

◆

கரை இடித்தது
முனகிவிட்டு நீரில்
படகு நகருகிறது.

◆

கோடைப் புயல்
பையன்களை
உள்ளே விரட்டுகிறது.

◆

மூங்கில் காற்றாடி
வானவில் வண்ணங்கள்.

◆

குட்டை அளையும்
புதிய சிவந்த
காலணிகள்.

◆

பிற்பகல் மூன்று
சன்னலருகே ஸ்வெட்டர் பின்னும்
பாட்டி.

◆

விளக்குப் போட
சுவரில் முகங்கள்
நெருப்புக் கட்டை நகர.

◆

அம்மா விழிக்கிறாள்
குழந்தை கனவு காண.

◆

ஐந்து பேர் தொடர்ந்து ஒருவருக்குப் பின் ஒருவர் பாடிய இந்த ரெங்காவில் தொடர்ச்சி அதிகம் இல்லை போல இருக்கும். யோசித்துப் பார்த்தால் சங்கிலிப் பிணைப்புப் புரியும். உதாரணமாகக் கடைசி ஆறு கவிதைகளில் ஒரு காலஉறவு பிணைப்பு இருப்பதைச் சொல் கிறேன்.

வீதியில் விளையாடிக்கொண்டிருக்கும் பையன்களை பலமான காற்று வீட்டுக்கு அனுப்ப, காற்றில் சுற்றும் காற்றாடியில் வானவில் வண்ணம். அடுத்த பாட்டிலும், மழை பிடித்து ஓய்ந்தபின் நீர்க்குட்டை களில் விளையாடும் சிறுவர்களும் அவர்களை சன்னல் வழியே பார்த்துக்கொண்டு ஸ்வெட்டர் பின்னும் பாட்டியும், இருட்டினப்புறம் பாட்டி கடந்த கால பிம்பங்களை சுவரில் பார்க்க, குளிருக்காகக் காயும் கட்டைகள் நகரும் சப்தத்தில் தாய் விழிக்க, குழந்தை கனவு காண, எதிர்காலத்தைச் சுட்டிக் காட்டி கவிதை முடிகிறது. இவ்வாறு

மற்ற பாடல்களையும் உங்கள் கற்பனையில் இணைக்க முடியும்.

இம்மாதிரி தமிழிலும் முயன்று பார்க்கலாம், கவியரங்கங்களில்.

பச்சைத் தவக்களை பச்சைத் தவக்களை
எத்தனை நெல்லுக்கு வாழ்க்கைப்பட்டே?
கோட்டை நெல்லுக்கு வாழ்க்கைப் பட்டேன்.
கோட்டை நெல்லில் முத்திரை போட
கணக்குப்பிள்ளை வேண்டுமே
கணக்குப் பிள்ளையைத் தட்டி எழுப்ப
கைக்குழந்தை வேண்டுமே
கைக் குழந்தைக்கு பால் கொடுக்க
பெண் ஒருத்தி வேண்டுமே
பெண் ஒருத்திக்கு பேன் பார்க்க
குரங்குக்குட்டி வேண்டுமே
குரங்குக்குட்டிக்கு வாலறுக்க சூரிக்கத்தி வேண்டுமே
சூரிக்கத்தியை செருகிவைக்க
பொத்தக் குடிசல் வேண்டுமே
பொத்தக் குடிசலை பிரித்துக்கட்ட
போத்த ராசா வேண்டுமே...

இவ்வகைப் பாடல்கள் தமிழர் நாட்டுப்புறப் பாடல்களில் நிறைய உண்டு. இதில் சாகசம் இரண்டு கருத்துக்களை இணைப்பது. நாம் முன்பு குறிப்பிட்ட ரெங்காவில் கவிதைக்குக் கவிதை ஒரு கருத்துத் தொடர்ச்சி இருப்பது போல இதில் வரிக்குவரி இணைத்து தொடர்ச்சி.

இவ்வகையில் ஜப்பானிய மொழியில் சென்றியு என்று ஒரு பாவகை உண்டு. ஒரு வரியை ஒருவர் பாட, எழுத அதனுடன் தொடர்பாக மற்றொரு வரியை இணைக்கும் காரியத்தை ஸுகெஆய் என்றார்கள். இந்த மாதிரி இணைக்கப்பட்ட (சில சமயம் செயற்கையாக இணைக்கப்பட்ட) வரிகளை இரட்டை இரட்டையாகப் புதுப்பித்துக் கொண்டிருந்தார்கள். மயேகூ என்று ஒரு அடி எடுத்துக் கொடுப் பார்கள். அதிலிருந்து இணைத்து ஸுகேகூ என்று ஒட்ட வைத்த பாடல்கள் இரட்டைப் பாடல்களாக எழுதினார்கள். இவ்வாறு இணைத்த ஜோடிகளுக்கென்று தனி அடையாளம் கிடைக்க, இப்படி இணைப்பதே ஒரு இலக்கிய பொழுதுபோக்காக ஆயிற்று. டீக்கடையில் ஒரு வரியை விட்டுவிட்டுப் போவார்கள். அதற்கு அருகில் ஒரு சில ஆரம்ப வரிகளை அதனுடன் இணைப்பாக பலர் வந்து கவி எழுதிக்கொடுப்பார்கள். இதற்குக் காசு தரவேண்டும். இணைக்கப்பட்ட கவிதைகளிலிருந்து நல்லவற்றைத் தேர்ந்தெடுத்து பத்திரிகைகளில் பிரசுரிப்பார்கள், அல்லது புத்தகமாகத் தொகுப்பார்கள். இந்தப் போட்டியில் ஜப்பானில் பலர், வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள் என்று கலந்து கொண்டு அது மக்கள் இயக்கமாக மாறியது. கவிதைகள் அவ்வளவு சுமாராகத்தான் இருந்தாலும் மக்களிடையே மிகவும் பிரபலமாக இருந்தது. 1770ம் வருஷ தொகுப்பிலிருந்து ஓர் உதாரணம்

ரொம்பத் தான் சினேகிதம்

இது ஆரம்ப வரி. (மயேக்கூ)

இதைத் தொடர்ந்து தொட்டுக் கொண்டு இரண்டு ஸுக்கெக்கூ.

அவன் மனைவி கடிதத்தில்
எழுதிக் கொண்டிக்கும்
காதல் கவிதை!

●

கணவன் திரும்பி வந்து
வீட்டில் போட்ட கூச்சல்.

முதல் தொடர்பில் மனைவி கையில் கள்ளக் கடுதாசி தெள்ளத் தெளியத் தெரிகிறது. இரண்டாவது கணவன் கண்டுபிடித்து விட்ட கோபம்.

இவ்வாறு தொடர்புக்காக எழுதப்பட்ட கவிதைகளை காரய் சென்றியு (1716–1790) என்பவர் தேர்ந்தெடுத்து பதிப்பித்தார். சென்றியுவின் சீடர் அருபெஷி என்பவர் இந்தக் கவிதைகளில் தனிப்பட்டு (ஆரம்ப வரி இல்லாமலேயே) புரியும் கவிதைகளை மட்டும் தேர்ந்தெடுத்து, வெளியிட்டார்.

இவ்வகை கவிதைகளுக்கு சென்றியு என்று பெயர் வந்தது.

சென்றியுவும் ஹைக்கூ போலத்தான் வடிவம் பெற்றது. ஆனால் உள்ளடக்கத்தில் நகைச்சுவையும் மனித இயல்பும் பிரதானமாக இருக்கும்.

பெட்டியைக் குடையும்போது
மனைவி ஓடிவருகிறாள்!

சில சென்றியுக்கள் சற்று பிலாசபி பேசும்.

●

அன்பு செலுத்த விரும்புகையில்
பெற்றோர்கள் போய்விட்டனர்!

சில வேளை ஹைக்கூ போலவே இருக்கும்.

●

மின்னல்
மேகம் துளைத்துவிட்டு
எங்கே செல்கிறது.

'துளைத்து' என்கிற உருவக வார்த்தைதான் சென்றியுவைக் காட்டிக் கொடுக்கிறது.

மின்னல்
நேற்று கிழக்கே
இன்று மேற்கே

இது அதே மின்னலைப் பற்றிய அசல் ஹைக்கூ.

கீழ்க்காணுபவைகளில் எது சென்றியு எது ஹைக்கூ?

உபதேசம் கேட்டு
அலுத்த காதில்
குயில்.

●

காத்திருந்து
அலுத்த காதுக்கு
தவளை சப்தங்கள் மட்டும்.

முன்னது சென்றியு, ஏனெனில் அது உபதேசிகளை நையாண்டி செய்கிறது.

இரண்டாவது ஹைக்கூ. காரணம் காதலி வருகிறாளா என்று காதைத் திறந்து வைத்துக் காத்துக்கொண்டிருக்கும் காதலனுக்கு தவளைகளின் தொடர்ந்த சப்தம் மட்டும்தான் கேட்கிறது. இரவு, ஏமாற்றம் எல்லாம் தெரியும் ஹைக்கூ.

சென்றியு மனித குணங்களில் உள்ள அபத்தம், நகைச்சுவை இவைகளைப் பிரதிபலிப்பது.

தமிழில் ஹைக்கூ என்று எண்ணிக்கொண்டு எழுதப்பட்ட பல கவிதைகள் சென்றியு வகையில் சேர்க்கலாம்.

நள்ளிரவில் வாங்கினோம்
இன்னும்
விடியவில்லை.

இது சென்றியு.

கல்யாண்ஜியின், பிரபலமான "தரை சுத்தமாச்சு மனசு குப்பை யாச்சு" கவிதையும் சென்றியுதான்.

சென்றியுவை சரியாக அடையாளம் கண்டுகொள்ள சில மேற்கத்திய உதாரணங்கள்:

ரயில்வர
முத்தம் ரெடி
ரயில் போயிற்று.

●

நண்பர்கள் ஆர்டர் செய்ய
மேசையடியில்
காசை எண்ணிக் கொண்டேன்.

●

நூலகம் மூடும் நேரம்
குடிகாரன் தூக்கம் விழிக்கிறான்
மூடிய புத்தகத்தை ஏந்தி!

●

எதிர்காற்றில்
பெருக்கும் பெண்ணின்
பாவாடை அழுத்தம்!

(இதை ஹைக்கூவில் கூடச் சேர்க்கலாம்)

ஹைக்கூ என்பது கவிதையில் மட்டுமில்லை, உரைநடையிலும் உண்டு. ஹைபுன் என்கிறார்கள். அதை, ஹைபுன், ஹைக்கூ ஆரம்பிக்க 17ம் நூற்றாண்டிலிருந்தே இருக்கிறது. பாஷோ நிறைய எழுதியிருக்கிறார்.

ஹைபுன் என்பது ஒரு சிறிய கட்டுரை. அங்கே இங்கே ஹைக்கூ செருகிய கட்டுரை. பாஷோவின் ஒரு கட்டுரையின் பகுதி மொழி பெயர்ப்பு.

"கியோட்டோவில் என் சிஷ்யனின் (பெயர் மறந்து போச்சு) குடிசை இருக்கிறது. அரஷியாமா மலையடிவாரத்தில் ஒம்காவா நதியருகில் அடர்த்தியான பசுமையில் அமைதியான சௌகரியமான இடம். மனசுக்கு நிம்மதி தருவது. ஆனால் சிஷ்யன் சோம்பேறி. சன்னல் வரை புல்வளர்ந்து கண்டபடி பரவிய மரக்கிளைகள். ஜூன் மாசம் மழை உள்ளே ஒழுகி... பாயெல்லாம் முடை நாற்றம். உட்கார லாயக்கான இடமில்லை. வெயில் மட்டும்தான் ஒரே ஒரு வரவேற்பு.

ஜூன் மழை
சுவரில் ஒட்டியிருந்த
கவிதைச் சீட்டின் சுவடு!

சின்ன பாராதான், எத்தனை இன்பமான குறிப்புக்கள். லேசான நகைச்சுவை... அந்த இடத்தின் தனிமை பாஷோவுக்குப் பிடித்திருக்கிறது. என்னதான் சிஷ்யன் சோம்பேறி என்றாலும் அழகுணர்ச்சி உள்ளவன். சுவரில் அட்டையில் கவிதை எழுதி ஒட்ட வைத்திருக்கிறான். கவிதையைத்தான் படிக்க முடியவில்லை, மழையில் விழுந்து விட்டது. அதன் சுவடு இருக்கிறது.

இவ்வகையில் மிக அழகான உரைநடைக் குறிப்புக்கள் ஹைபுன். ஹைபுன்னின் முக்கிய அம்சங்கள் இவை:–

1. உரைநடையில் எழுதியிருக்க வேண்டும். இறுதியில் ஒன்றிரண்டு ஹைக்கூ.

2. சுருக்கம்

3. இலக்கண சுத்தமாக வாக்கியங்கள் அமைய வேண்டும் என்று கட்டாயமில்லை. வார்த்தைகளில் சில சமயம் வினைச் சொற்கள் கூட இருக்காது.

4. ஹைக்கூவுக்கு விளக்கம் இருக்காது. ஆனால் ரெங்கா போல் ஒரு சம்பந்தம் இருக்கும்.

5. காட்சிகள் மட்டும். தத்துவங்கள், பொன் மொழிகள் இருக்காது.

6. புறநோக்கு, உள்நோக்கு இருக்காது.

7. கொஞ்சம் நகைச்சுவை இருக்கும். அழகுணர்ச்சி இருக்கும்.

பாஷோ இவ்வாறு சுமார் 60 ஹைபுன் எழுதினார். இடங்கள், மனிதர்கள், தினவாழ்க்கை இப்படி அவருடைய ஒரு நொஹோ ஸொமிசி (குறுகலான உள் பாதைகள்) ஜப்பானிய இலக்கியத்தில் தலைசிறந்த நூல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது ஹைபுன் வகை.

பாஷோவைப்போல புஸானும் ஹைபுன் எழுதினார். கொஞ்சம் நீளம் அதிகமாக.

ஹைபுன் வகை சிறு உரைநடைச் சித்திரங்கள், மேற்கத்திய இலக்கியத்தில் அதிகம் எழுதப்படவில்லை. ஜாக்கெரோவாக்கின் சில பாராக்கள் இவ்வகையைச் சார்ந்தது. ஜான் அப்டைக், ட்ரூமன் கபோட், நபகாவ் போன்றோர்களின் உரைநடையில் ஹைபுன் சாயல் இருப்பது தெரியும்.

தமிழில் ஹைபுன் போல இருக்கிறது என்ற உதாரணம் சொல்ல வேண்டுமானால் பாரதிதாசன்;

"சிறிய தானியம் போன்ற மூக்கு . . ." என்று துவங்கும் குருவி வர்ணனை உதாரணம்.

ஹைபுன் தினசரி நிகழ்ச்சிகளைப்பற்றி இருக்கவேண்டும். நிகழ்ச்சிகள், பொருள்கள், ஆசாமிகள், நடவடிக்கைகள் . . . இவைகளுக்கும் ஒரு காலமற்ற தொடர்ச்சிக்கும் உள்ள சம்பந்தத்தை ஒரு உள் சரடு போலக் காட்டவேண்டும். சொற்செட்டுடன் தேவையற்ற இலக்கண அலங்காரங்களின்றி தேர்ந்தெடுத்த மணியான வார்த்தைகளில் சுருக்கமாக இருக்கவேண்டும். ஹைபுன் எழுதிப் பாருங்கள்.

8. இறுதியாக சில வார்த்தைகள்

ஹைக்கூ ஒரு சிறிய கவிதை. சின்னதாக இருப்பதில் நிறைய சந்தோஷங்கள் உள்ளன. Small is beautiful என்பது போல சின்னதாக இருப்பதால் அனாவசிய வார்த்தைகள் இல்லை. அலங்காரங்கள் இல்லை. நேராக ஒரு அனுபவத்துக்கு அழைத்துச் செல்கிறது. ராபர்ட் ப்ளை என்பவர் இதை வசீகரமாகச் சொல்லியிருக்கிறார்.

"சிறிய கவிதையில் கவிஞன் வாசகனை ஒரு மலையுச்சிக்கு ஒரு கழுகு தன் குஞ்சை எடுத்துச் செல்வது போல அழைத்துச் சென்று, அங்கே தொபுக் என்று போட்டு விடுகிறான்! கற்பனை உள்ள வாசகன் பறக்கிறான். இல்லாதவன் விழுந்து சாகிறான்."

சிறு கவிதை ஒரு சவால். 'வா, என்னுடன் பற' அது வாசகன் மனத்தில் பிரதிபிம்பங்களை ஏற்படுத்தும் வரை முற்றுப் பெறுவதில்லை. வாசகன் வரும்வரை கேளாத கானம், உணராத சிரிப்பு. அரும்பில் உறைவாசம்.

கவிதை சிறியதாக இருந்தாலும், கவிதை படிப்பவன் மனதில் ஏற்படுத்தும் உணர்ச்சிகளுக்குக் கட்டுப்பாடு இல்லை. Evocation என்பார்களே, நம் மனதில் கிளர்ந்தெழும் தொடர் எண்ணங்கள். அவைகளை கட்டுப்படுத்தத் தேவையில்லை. அவை ஏற்படாவிட்டால் ஹைக்கூ தோற்றுப் போகிறது. இந்தப் புத்தகத்தில் உள்ள ஏதாவது ஒரு ஹைக்கூவை எடுத்துக்கொண்டு பார்ப்போம்:

சாக்கடையில்
மிதக்கும் முகமூடி
காற்றில் தலையசைக்கிறது!

இந்தக் கவிதை என்னுள் ஏற்படுத்திய உணர்வுகளை கீழே தருகிறேன்.

சாக்கடை என்றதும் எனக்கு நான் சின்ன வயசிலிருந்து பார்த்த பற்பல சாக்கடைகள் – ஸ்ரீரங்கத்தில் வீட்டுவாசலில் போகும் சின்ன சாக்கடை, திட்டி வாசல் அருகில் இருக்கும் பெரிய சாக்கடை, வாசல் ரோடு, உய்யக் கொண்டான் வாய்க்காலில் சேரும் அகல சாக்கடை, அதன் ஆரவாரங்கள், லேசான ஸல்ஃபர் நாற்றம், கரும் பச்சை, தில் மிதக்கும் காய்ந்த மாலைகள், முகமூடி – மார்கழித்

திருநாளில் விற்பார்களே அந்த முகமூடியா? வீட்டுக்கு சிருஷ்டிக்கு வைப்பார்களே அதுவா? சினிமாக்களில் வருமே சிரிப்பு அழுகை அதுவா ... முகமூடியை யார் சாக்கடையில் எறிந்தார்கள். முகமூடியுடன் விளையாடி அலுத்துவிட்டதால் எறிந்து விட்டார்களா? நாடகம் முடிந்துவிட்டதா? நாடகம் தோல்வியா? ஒருமுறை உய்யக் கொண்டான் வாய்க்காலில் ஒரு பிணம் மிதந்ததே அதுகூட லேசாக காற்றில் தலையசைத்து, உயிரில்லாததற்கு உயிருள்ளது போல. இம்மாதிரி செத்த பின்னும் உயிர்வாழும் காட்சிகள் எத்தனை பார்த்திருக்கிறேன் நான். வைக்கோல் கன்றுக்குட்டி ... சைக்கிளின் பின் செல்லும் பலியாட்டுத் தலை ... கடையில் வைத்திருக்கும் பொம்மைகள் ...

இவ்வாறு அத்தனை சலனங்கள் இந்தக் கவிதையில் உள்ளது. ஹைக்கூ ஒரு 'ட்ரிக்கர்'. நம் எண்ணங்களை நம் ஞாபகங்களை இதே சாக்கடை, இதே முகமூடி உங்களுக்கு வேறு விதமாகப் படலாம். ஹைக்கூ மற்ற பேர் அனுபவத்துக்கு மரியாதை தருகிறது. நம்முடைய அனுபவங்களை, ஞாபகங்களை பத்திரப் படுத்துகிறது. சுலபமாக எளிதான ஜப்பானிய கவிதைக்கு அறிமுகமாகி உங்களுக்கு இஷ்டமிருந்தால் உலக இலக்கியங்களில் மற்ற வடிவங்களைப் பற்றி அறிந்துகொள்ள ஒரு ஆவலை ஏற்படுத்துகிறது. ஏன் நம் சங்க இலக்கியங்களையே வேறு தினுசாகப் பார்க்கலாமே... எனக்குப் புலப்பட்டது போல் உங்களுக்கும் நிறைய ஹைக்கூ காட்சிகள் புலப்படலாம்.

எல்லா ஹைக்கூவும் உங்களுக்குப் புரிய வேண்டும் என்று கட்டாய மில்லை. புரியாவிட்டால் அது உங்கள் தப்பில்லை, விட்டுவிடுங்கள், ஹைக்கூ வலிக்காது.

ஹைக்கூவிலிருந்து ரெங்கா, தொடர் ஹைக்கூ, சென்றியு, நையாண்டி, மனித இயல்பு, ஹைபுன், சுருக்கென்ற உரைநடை எத்தனை இருக்கிறது. அங்கிருந்து ஜென்பவுத்தம் கூடத் தொட்டுப் பார்க்கலாம். ஜென்பவுத்தம் ஹைக்கூவைப் பாதித்திருப்பதை சுஜுகி அலன்வாட்ஸ், ப்ளைத் போன்ற பல அறிஞர்கள் சொல்லியிருக் கிறார்கள். மைக்கல் ஆஞ்செலோ என்கிற பிரபல சித்திரக்காரச் சிற்பியின் அனைத்துச் சிற்பங்களும் கிறித்துவ வேத சம்பந்தப்பட்டவை, ரவிவர்மாவின் சித்திரங்கள் இந்திய புராணக் கதைகளுடன் சம்பந்தப் பட்டது போல. அது போல் கன்பூஷியஸின் சித்தாந்தங்கள், ஜென் பவுத்த சித்தாந்தங்கள் எல்லாம் ஹைக்கூவைப் பாதித்திருப்பதைப் பலர் விளக்கியுள்ளார்கள். அதை நான் இந்த அறிமுகப் புத்தகத்தில் சொல்லவில்லை. காரணம், முதலில் ஹைக்கூவின் நேரடியான பாதிப்பை, அர்த்தத்தை அறிமுகம் செய்து விட்டுத்தான் அடித் தளத்தில் உள்ள பவுத்தமத சித்தாந்தங்கள் தொடர்பான அர்த்தங்களை அடைய முடியும். நேரடி அர்த்தங்களே நிறைய மூச்சுத் திணறும்.

"உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையுமெல்லாம்

கண்ணன்” என்று ஆழ்வார் பாட்டில் நேரடியாக [illegible] என்பது எல்லாருக்கும் புரியும். அதன் அடித்தளத்தில் எங்கும் வியாபித்திருக்கும் பரமாத்மாவைச் சொல்கிறார் என்று புரிந்து கொள்ள வேதாந்தம் தெரிந்திருக்க வேண்டும். அது அப்புறம்.

மேற்கத்திய கவிஞர்கள் எஸ்ரா பவுண்டு, வாலஸ் ஸ்டீவன், கின்ஸ்பர்க் என்று பலர் ஹைக்கூ எழுதினர்.

ஜப்பானிய ஹைக்கூவுக்கும் மேற்கத்திய ஹைக்கூவுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பற்றி ஜான் ஃப்ளெட்ச்சர் என்னும் விமரிசகர் சொல்கிறார்.

ஜப்பானியக் கவிஞன் ஒரு பொருளைச் சுட்டிக்காட்டி விட்டு விடுவான். கிளைத்தெழும் உணர்ச்சியை வாசகன் தன் மனத்தில் நிரப்பிக்கொள்ள வேண்டும். மேற்கத்திய கவிஞன் சுட்டிக் காட்டி விட்டு அது ஏற்படுத்தும் உணர்ச்சியையும் சொல்வான், சில சமயம் மிகையாக.

இது தமிழ்க் கவிதைகளுக்கும் பொருந்தும்.

ஜப்பானிய கவிஞர்கள் மட்டுமின்றி நாவலாளர்களும் சிறுகதை யாளர்களும் கூட ஹைக்கூவினால் பாதிக்கப்பட்டார்கள். ஹைக்கூவி லும் கதை சொல்லும் சாத்தியம், ஆர்வம் இருப்பதால்,

வாஷ் பேசினில்
முகம் அலும்பும்போது
நிழல்!

ஸெஸெசி என்கிற நாவலாசிரியர் எழுதியது. ஜார்ஜ் ஸ்விடு என்னும் கனடா தேசத்து கவிஞர், “ஹைக்கூ இரண்டு உணர்வு சார்ந்த பிம்பங்களை அடுத்தடுத்து அமைக்கிறது, உவமை. உருவகம் இன்றி. இது சரியாக வந்தால் சட்டென்று வெளி உலகத்தை நமக்குப் புரிய வைக்கிறது. தன்னைப் பற்றியே எண்ணம் சூழ்ந்தவன் வெளிப் பட்டு வெளி உலக இயற்கையில் உள்ள ஒற்றுமையை உணர முடிகிறது . . .”

ஜெயில் கைதிகள் கூட ஹைக்கூ எழுதியுள்ளனர்.

முள்வேலி உயரம்
சிறைச்சாலை விளக்குகள்
ஒவ்வொன்றாக அணைகின்றன!

யசுதா அமெரிக்காவில் வாழும் ஜப்பானியர். இரண்டாம் உலகப் போருக்குப் பின் அவரை ரொம்ப இம்சை பண்ணினார்கள். இருந்தும் மனத்தில் காழ்ப்பில்லாத அபாரமான கவிதைகள் ஆங்கிலத்தில் எழுதினார். காரணம் ஹைக்கூ.

மறுபடியும்
மலரிதழில்
மழையின் முணுமுணுப்பு.

இதைவிட மென்மையாக கவிதை இருக்க முடியுமா? அதே போல் ஸோயிசி ஃபுருட்டா என்கிறவர் ஜப்பானிய, ஆங்கில மொழி இரண்டிலும் ஹைக்கூ எழுதியிருக்கிறார்.

வேனில் வெளிச்சத்தில்
போஸ்டர் கிழிந்து
குரு சிரிக்கிறார்.

1981ல் கனடாவில் பதிப்பித்த காகிதக் கதவுகள் என்கிற கவிதைத் தொகுப்பில் அழகான கவிதைகள் உள்ளன.

காலைப் பனியில்
முழுதும் நனைந்த
லாட்டரி டிக்கெட்.

பாஷோ சொன்னது போல,

"அவர்கள் பார்க்குமிடமெல்லாம் மலர்கள். அவர்கள் நினைப்பதெல்லாம் நிலவு."

9. சில பின் குறிப்புகள்

இந்தப் புத்தகத்தின் பெரும்பான்மையான கருத்துக்கள் William J. Higgins, Penny Harmer இருவரும் எழுதிய *The Haiku Handbook* என்கிற மிக விஸ்தாரமான புத்தகத்தை ஆதரித்தவை. பல ஹைக்கூவின் ஆங்கில வடிவங்கள் இந்தப் புத்தகத்திலிருந்துதான் எடுத்து மொழி பெயர்த்துள்ளேன். இதைப் படிக்காவிட்டால் நான் இந்நூலை எழுதியிருக்க மாட்டேன். கீழ்க்காணும் புத்தகங்களும் எனக்குப் பயன்பட்டன.

தமிழக நாட்டுப்புறப் பாடல்கள்

திருமணப் பாடல்கள் – கி, வா. ஜகந்நாதன்

சூரியப் பிறைகள் – தமிழன்பன்

தமிழவன், என். சுப்ரமண்யபாரதி ஆகியோரின் கட்டுரைகள்

திருக்குறள்

அகநானூறு, புறநானூறு – புலியூர்கேசிகன் தெளிவுரைகள்

சிலப்பதிகாரம்

உள்வாங்கும் உலகம் – விக்கிரமாதித்யன்

எழுத்து சொல் பொருள்

காலச்சுவடு

கணையாழி

இந்தப் புத்தகத்தில் வரும் சில ஜப்பானிய வார்த்தைகளுக்கு விளக்கம்.

சோக்கா: நீண்ட கவிதை. மாற்றி மாற்றி 5, 7 அசைகள் ஒன்றி வருவது. இறுதி வரி ஒரு ஏழசை அல்லது பன்னிரண்டு, பன்னிரண்டரை வரிகள். மன்யோஷு காலத்தில் இந்த வடிவம் பிரபலமாயிருந்தது.

தோதோகிட்ஸு: (ஊருக்கு ஊர்) நாட்டுப் பாடல் வகை. 7, 7, 7, 5 அசைகளாக ஊருக்கு ஊர் விரைவில் பரவியதாம்.

ஹைபுன்: உரைநடை சுருக்கமான நடையில் ஹைக்கூ. கவிதையின் இறுதியில் ஒரு ஹைக்கூ இருக்கும்.

ஹைக்காய்: நகைச்சுவை கவிதை. ஜப்பானிய நகைச்சுவைகளைப் புரிந்துகொள்வது கஷ்டம். நாளடைவில் ஹைக்காய் என்பதை ஹைக்கூவுக்கே பயன்படுத்தினர்.

ஹைக்காய் நொ ரெங்கா: நகைச்சுவை கலந்த ரெங்கா.

ஹைக்கூ: ஆரம்ப நாட்களில் ரெங்காவின் ஆரம்பப்பாடலான ஹொாக்குவாக இருந்து நாளடைவில் தனி அந்தஸ்து பெற்றது. பருக் குறிப்பான 'கிகோ' பிரிக்கும் 'வார்த்தை'யான கிரெஜி 5, 7, 5 அசைகள் என்று கொண்டது. நவீன ஹைக்கூவில் இதெல்லாம் விட்டு விட்டார்கள்.

மேற்கத்திய இலக்கியத்தில் ஹைக்கூ என்பதன் பொருள் விஸ்தாரமாகி, சின்னதாக நேராக எழுதப்படும் எல்லாக் கவிதைகளுமே ஹைக்கூ என்கிற அளவுக்குப் பிரபலமாகி விட்டது.

ஹொாக்கு: ஹைக்கூவின் முதல் பா.

கிகோ : (பருவ வார்த்தை) சம்பிரதாய ஹைக்கூவில் பருவக் குறிப்புத் தரும் வார்த்தை. ஏதாவது ஒரு செடி. பிராணி அல்லது நேரடியான பருவ வார்த்தை, சீஸனுக்கு ஏற்ற வார்த்தை. ஈசல் என்றால் மழை, காற்று என்றால் கூதல் காலம், பனி என்றால் குளிர்காலம் – இப்படி

கிரேஜி : (வெட்டு வார்த்தை) ஹைக்கூ இரண்டாகப் பிரியும் இடத்தில் விகுதி வார்த்தை. தனிப்பட்ட அர்த்தம் கிடையாது. ஒருவாறு வேற்றுமை உருபுகள் போல உ, ஆ, அல். அது போல் விகுதிகள்.

ஒன்ஜி : (ஒன்) என்றால் ஓசை, சப்தம், ஒரு அசை, ஜப்பானிய மொழியில் பெரும்பாலானவை நேரசைகளாக இருக்கின்றன. அ, இ, உ, ந, ஆம், அய். நிரையசைகளை இரண்டு ஒன்ஜிகளாகக் கருதுகிறார்கள். படும் என்றால் படும் என்று இரு ஒன்ஜி. தமிழில் படும் என்பது நிரையசை. நம் நேர் அசைகள் அனைத்தும் ஜப்பானிய கவிதை வரிகள் 5, 7, 5 ஒன்ஜிகளாக பிரிக்கப்பெறும்.

ரெங்கா : (தொடர் கவிதை) அந்தாதி போல அடுத்தடுத்து வரும் கவிதைகள். ஒவ்வொன்றும் 5, 7, 5 அல்லது 7, 7 ஒன்ஜி கவிதைகள். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கவிஞர்கள் ஒத்துழைத்து தொடர்ந்து சங்கிலியாக எழுதும் கவிதை. 36, 50, 100 ஆயிரம் பாடல்கள் கூட ஒரு ரெங்காவில் உண்டு.

சென்றியு : நகைச்சுவை. மனித இயல்பைச் சுட்டிக்காட்டும் பாடல் கலந்த ஹைக்கூ போலவே இருப்பது. 'சென்றியு' என்பது இவைகளை முதலில் தொகுத்தவர் பெயர். தமிழில் சமூகப் பாடல்கள் நிறைந்த ஹைக்கூ என்று சொல்லப்படுபவை அனைத்தும் இந்த வகையில்தான் சேரும்.

தன்கா : (சிறு கவிதை) ஆனால் ஹைக்கூவை விட அதிக நீளம். 7, 5, 7, 7. ஆங்கில ஸானெட் போல. 'மன்யோஷா' கவிதைத் தொகுப்பு காலத்திலிருந்து 14ம் நூற்றாண்டுவரை இதுதான் பிரபலமான வடிவம்.

ட்ஸுகேசாய் : (இணைப்பது) ரெங்காவில் இரண்டு பாடல்களை இணைக்கும் செயல்.

ஸுட்ஸுகேகூ : இணைந்த இரண்டாவது கவிதை.

மயேகூ : இணைந்த இரட்டை கவிதையில் முதல் கவிதை.

மயேகூஸுகே : கவிதைகளை இணைக்கும் விளையாட்டு. பாட்டுக்குப் பாட்டு எடுப்பது. நீங்கள் ஒரு கவிதை தர நான் அதனுடன் இணைந்த கவிதை தருவது. இந்த விளையாட்டிலிருந்துதான் சென்றியு துவங்கியது.

மன்யோஷு : எட்டாம் நூற்றாண்டில் ஜப்பானிய கவிதைகளைத் தொகுத்து வெளிவந்த நூல்.

கோகின்ஷு : பத்தாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட நூலின் பெயர்.

10. படிக்க வேண்டிய சில புத்தகங்கள்

ஜப்பானிய இலக்கிய சரித்திரத்தைப் பற்றிய ஏதாவது ஒரு நல்ல புத்தகத்தைப் படிப்பது பின்னணியாகப் பயன்படும்.

The Penguin Book of Japanese Verse என்பது நல்ல தொகுப்பு

Hiroaki Sato, Burton Watson இன் *An anthology of Japanese Poetry.* 1989ல் பிரசித்தமானது. தாமஸ் ரைமரின் பின் குறிப்பு உபயோகமானது. Doubleday கம்பெனி வெளியிட்டது. தமிழில் இதுபோல் ஒரு தொகுப்பு வர வேண்டும்.

Zen புத்த மதத்தைப் பற்றி அலன் வாட்ஸ்.

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in



இன்று தமிழில் பரவலாக
எழுதப்படும் ஹைக்கூ எல்லாம்
உண்மையில் ஹைக்கூதானா?
ஹைக்கூவின் அழகியல் மற்றும்
தத்துவார்த்த இலக்கணம் என்ன?
கவிதைக்கும் ஹைக்கூவுக்குமான
வித்தியாசங்கள் யாவை?
இதுபோன்ற பல கேள்விகளுக்கு
விரிவான உதாரணங்களுடன்
பதிலளிக்கிறது இந்த நூல்.
ஹைக்கூ என்ற இலக்கிய
வடிவத்தினூடே அதன் ஆழமான
வாழ்வியல் நோக்கிற்கு நம்மை
இட்டுச் செல்கிறார் சுஜாதா.